# கற்றற் சந்தர்ப்பம் - 01 சுமுகமான உரையாடல்

| கற்றல்பேறுகள் | செயலடைவுத் தரம் | உள்ளடக்கம் | உள்ளடக்க எல்லைகள் |
|---|---|---|---|
| 1.1<br>கலந்துரையாடலை செவிமடுத்துத் துலங்குவார். | 1.1.1<br>அன்றாட நடவடிக்கைகளின்போது இடம்பெறும் சுமுகமான கலந்துரையாடலை முழுமையாகச் செவிமடுத்து, அதில் உள்ளடங்கிய விடயங்களைப் படிமுறையாக முன்வைப்பார்.<br><br>1.1.2<br>சுமுகமான கலந்துரையாடலில் நேரடியாகப்பங்கேற்று, பொருத்தமான விளிப்புச் சொற்களைக் கையாண்டு பண்போடு கலந்துரையாடுவார். | சுமுகமான உரையாடல் | பெற்றோர், அதிபர், நண்பர்கள், அயலவர்களுடன் உரையாடுதல்<br><br>சுகாதாரப் பழக்கவழக்கம், விளையாட்டு, பூந்தோட்டம் அமைத்தல்.<br><br>கருத்துக்களைச் சுயமாகவும் பொருத்தமாகவும் முன்வைத்து பொருத்தமாக உரையாடுதல். |

**பாடத்தின் நோக்கங்கள் (AIMS)**

- கலந்துரையாடப்படும் விடயங்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.
- ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிதானமாக உரையாடுவார்.
- பொருத்தமான விளிப்புச் சொற்களைக் கையாண்டு பண்போடு பேசுவார்.
- கலந்துரையாடல்களின் போது முன்வைக்கப்படும் விடயங்களை ஒழுங்குமுறைப்படி கூறுவார்.
- நேர்சிந்தனையுடன் கலந்துரையாடும் திறனை வெளிப்படுத்தவார்.

1. **செயற்பாடு:** 1.1.1
2. **காலம் :- 100** நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** சுமுகமான உரையாடல்
4. **இச்செயற்பாட்டின்மூலம் மாணவர்கள் அடைந்துகொள்ள இருப்பவை:-**
    - கலந்துரையாடப்படும் விடயங்களைச் செவிமடுக்கவும் நிதானமாக உரையாடவும் முன்வருவார்.
    - பொருத்தமான விளிப்புச் சொற்களைக் கையாளவும் பண்போடு பேசவும் வேண்டுமென்பதைக் கவனத்திற்கொள்வார்.
    - முன்வைக்கப்படும் விடயங்களை ஒழுங்குமுறைப்படி கூறவேண்டும் என்பதை வெளிப்படுத்திக் காட்டுவார்.

**5. செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்:-**

- சமயத்தலைவர், பொதுச்சுகாதார பரிசோதகர் முதலியோருள் யாரேனும் ஒருவருடன் உரையாடியிருக்கிறீர்களா? என்று கேட்டு அவ்விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- அந்த உரையாடல் தொடர்பாகத் தரப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க வழிப்படுத்துங்கள்.
- விசாரனை அடிப்படையிலான அறிவியல் அணுகுமுறையினைக் கையாளுங்கள். (SMI)

**6. தரவிருத்தி உள்ளீடுகள் :-**

MP3 வடிவிலான உரையாடல்கள்

**7. இச்செயற்பாட்டின்மூலம் அடைந்துகொள்ளப்படும் திறன்கள்**

- அக்கறை, நேர்மை
- விடாமுயற்சி
- தொடர்பாடல்
- பொறுப்புக்கூறல்
- நெகிழ்வுத்தன்மை

**8. வீட்டுவேலை**

- மேலும் இரண்டு உரையாடல்களைக் செவிமடுத்து தத்தம் கருத்துக்களை முன்வைக்க வழிப்படுத்துங்கள்.

**9. பின்தொடர் வேலை**

- உரையாடல்கள் நடைபெறும் ஊடகங்களை இனங்கண்டு கூறவும் அந்த ஊடகத்தில் இடம்பெற்ற உரையாடலை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அவை தொடர்பான கருத்துகளை கூற வழிப்படுத்துங்கள்.

| **செயலடைவுத் தரம்** | **நியதிகள்** | **மிகநன்று** | **நன்று** | **சாதாரணம்** | **முன்னேற்றம் தேவை** |
|---|---|---|---|---|---|
| அன்றாட நடவடிக்கைளின் போது இடம்பெறும் சுமுகமான கலந்துரையாடலை முழுமையாகச் செவிமடுத்து, அதில் உள்ளடங்கிய விடயங்களைப் படிமுறையாக முன்வைப்பார். | செவிமடுக் குந்திறன் | கலந்துரையாடலை முழுமையாகவும், மிகுந்த அவதானத்துடனும், எவ்விதமான கவனச்சிதறலுமின்றிச் செவிமடுத்தார். | கலந்துரையாடலின் முக்கியமான விடயங்களைக் கவனித்தார், ஆனால், சில சிறிய நுணுக்கங்களைத் தவறவிட்டார். | கலந்துரையாடலின் சில பகுதிகளை அவதானத்துடன் செவிமடுத்தார். ஆனால், அவ்வப்போது கவனச்சிதறல்கள் காணப்பட்டன. சில முக்கிய விடயங்களைத் தவறவிட்டார். | கலந்துரையாடலை அவதானத்துடன் செவிமடுக்கத் தவறினார். பல முக்கிய விடயங்களையும், நுணுக்கங்களையும் தவறவிட்டார். |
| . | உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ளுதல் | கலந்துரையாடப்பட்ட அனைத்து முக்கிய கருத்துக்களையும், துணைத் தகவல்களையும், அவற்றிற்கிடையிலான தொடர்புகளையும் ஆழமாகப் புரிந்து கொண்டார். | கலந்துரையாடப்பட்ட பெரும்பாலான முக்கிய கருத்துக்களையும், சில துணைத் தகவல்களையும் சரியாகப் புரிந்து கொண்டார். | கலந்துரையாடப்பட்ட சில முக்கிய கருத்துக்களைப் புரிந்து கொண்டார், ஆனால், துணைத் தகவல்களையோ அல்லது முழுமையான பொருளையோ புரிந்துகொள்வதில் சிரமம் இருந்தது. | கலந்துரையாடப்பட்ட விடயங்களின் அடிப்படை அர்த்தத்தைக்கூட புரிந்துக் கொள்வதில் குறிப்பிடத்தக்க சிரமம் இருந்தது. |
| | முக்கிய விடயங்களை இனங்காணல் | கலந்துரையாடலில் உள்ளடங்கியிருந்த அனைத்து முக்கிய விடயங்களையும், சாராம்சமான தகவல்களையும் மிகத் துல்லியமாக இனங்கண்டார். | கலந்துரையாடலில் உள்ளடங்கியிருந்த பெரும்பாலான முக்கிய விடயங்களைச் சரியாக இனங்கண்டார். | கலந்துரையாடலில் உள்ளடங்கியிருந்த சில முக்கிய விடயங்களை மாத்திரம் இனங்கண்டார். சில தேவையற்ற தகவல்களையும் சேர்த்திருந்தார். | கலந்துரையாடலின் முக்கிய விடயங்களை இனங்காணத் தவறியதோடு, மிகக் குறைவான விடயங்களையே இனங்கண்டார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விடயங்களைப் படிமுறையாக முன்வைத்தல் | இனங்கண்ட அனைத்து விடயங்களையும் மிகவும் தர்க்கரீதியாகவும், தெளிவான படிமுறை ஒழுங்கிலும், கோர்வையாகவும் முன்வைத்தார். ஆரம்பம், நடுப்பகுதி, முடிவு என்பன தெளிவாக இருந்தன. | இனங்கண்ட விடயங்களை தர்க்கரீதியான ஒழுங்கில் முன்வைத்தார். படிமுறைகள் தெளிவாக இருந்தன. ஆரம்பம், நடுப்பகுதி, முடிவு என்பனவற்றுள் இரண்டு இருந்தன. | இனங்கண்ட விடயங்களை ஓரளவு படிமுறையாக முன்வைக்க முயற்சித்தார. ஆனால் ஆரம்பம், நடுப்பகுதி, முடிவு என்பனவற்றுள் ஒன்று மட்டும் இருந்தது. | இனங்கண்ட விடயங்களை ஒழுங்கின்றியும், தொடர்பின்றியும், குழப்பமான முறையிலும் முன்வைத்தார். படிமுறை ஒழுங்கு காணப் படவில்லை. |
| | தெளிவும் துல்லியமும் | முன்வைக்கப் பட்ட தகவல்கள் அனைத்தும் மிகவும் தெளிவாகவும், சுருக்கமாகவும், செவிமடுக்கப் பட்டன. கலந்துரையாடல் முற்றிலும் துல்லியமாக இருந்தது. மொழிநடை சிறப்பாக இருந்தது. | முன்வைக்கப்பட்ட தகவல்கள் தெளிவாகவும், பெரும்பாலும் துல்லியமாகவும் இருந்தன. சில சிறிய தவறுகள் அல்லது தெளிவின்மை காணப்பட்டது. | முன்வைக்கப்பட்ட தகவல்கள் ஓரளவு தெளிவாக இருந்தன, ஆனால் சில முக்கிய தவறுகள் அல்லது தெளிவற்ற பகுதிகள் காணப்பட்டன. | முன்வைக்கப்பட்ட தகவல்கள் குழப்பமாகவும், துல்லியமின்றியும், புரிந்துகொள்ளக் கடினமாகவும் இருந்தன. மொழி நடையில் பலவீனங்கள் காணப்பட்டன. |
| | நேர முகாமைத்துவம் | கொடுக்கப் பட்ட நேரத்திற்குள் அனைத்து விடயங்களையும் சிறப்பாகவும் முழுமையாகவும் முன்வைத்தார். | கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் பெரும்பாலான விடயங்களை முன்வைத்தார். | விடயங்களை முன்வைப்பதற்கு அதிக நேரம் எடுத்துக் கொண்டதோடு சில விடயங்களை நேரமின்மையால் கூறத் தவறினார். | நேரத்தைப் பற்றி எவ்வித அக்கறையுமின்றி செயற்பட்டார். அல்லது மிகக் குறைவான விடயங்களையே முன்வைத்தார். |

1. **செயற்பாடு:** 1.1.2
2. **காலம் :-** 50 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** குழுநிலையில் சுமுகமான உரையாடல்.
4. **இச்செயற்பாட்டின்மூலம் மாணவர்கள் அடைந்துகொள்ளவுள்ளவை :-**
   - சுமுகமான உரையாடலின்போது கடைப்பிடிக்க வேண்டிய பண்புகளை கவனத்திற்கொண்டு குழுநிலையில் உரையாடிக்காட்டுவார்.
   - சுயமாகவும் பொருத்தமாகவும் கருத்துக்களை முன்வைத்துப் பண்போடு உரையாடுவார்.
   - தொடர்பாடல் தேர்ச்சியினை வெளிப்படுத்துவார்.
5. **செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல் :-**
   - மாணவர்கள் தாமாகவே குழுக்களாகுவதற்குரிய வழிகாட்டல்களை வழங்குங்கள்.
   - தரப்பட்ட விடயத்துக்கேற்ப, தகவல்களைத் திரட்டவும் உரையாடவும் வழிப்படுத்துங்கள்.
   - குழுநிலையில் உரையாடல் தடங்கலின்றி இடம்பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
   - கலப்புக்கற்றல் அணுகுமுறையினைக் கையாளுங்கள் (Blended Learning)
6. **தரவிருத்தி உள்ளீடுகள் :-**
   உரையாடலுக்கேற்ற வகுப்பறை, எழுதுகருவிகள், எழுதுபொருட்கள்
7. **இச்செயற்பாட்டின்மூலம் அடைந்துகொள்ளப்படும் திறன்கள் :-**
   - தொடர்பாடல்
   - பொறுப்புக்கூறல்
   - விடாமுயற்சி
   - அக்கறை, நேர்மை
   - நெகிழ்வுத் தன்மை
   - விமர்சனச் சிந்தனை
   - படைப்பாற்றல்
8. **வீட்டுவேலை**
   - வீட்டினுள் அங்கத்தவர்களைக் குழுவாக்கிக்கொண்டு பொருத்தமான தலைப்பில் சுமுகமான உரையாடலை நடத்த ஏற்ற ஒழுங்குகளைச் செய்யுங்கள்.
   - அந்த உரையாடல் தொடர்பாகக் கருத்துக்களை முன்வைக்க வழிகாட்டுங்கள்.
9. **பின்தொடர் வேலை / மேலதிக வாசிப்பு :-**
   - பல்வேறு ஊடகங்களில் இடம்பெற்ற வெவ்வேறு வகைப்பட்ட உரையாடல்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
   - அந்த உரையாடல்களில் காணப்படும் குறைநிறைகள் தொடர்பான கருத்துக்களை முன்வைக்க வழிகாட்டுங்கள்.

## Rubrics

| செயலடைவுத் தரம் | நியதி | மிகநன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| சுமுகமான கலந்துரையாடலில் நேரடியாகப் பங்கேற்று, பொருத்தமான விளிப்புச் சொற்களைக் கையாண்டு பண்போடு கலந்துரையாடுவார். | பங்கேற்பு மற்றும் நேரடி ஈடுபாடு | உரையாடலில் முழுமையாக மற்றும் திறம்படப் பங்கேற்கிறார். புதிய கருத்துகளைப் பகிர்ந்துகொண்டு, விவாதத்தை முன்னெடுத்துச் செல்கிறார். | உரையாடலில் சுமுகமாகப் பங்கேற்கிறார். கருத்துகளைத் தெளிவாகப் பகிர்ந்துகொள்கிறார், ஆனால், விவாதத்தை முன்னெடுப்பதில்லை. | உரையாடலில் பங்கேற்கிறார், ஆனால், சில சமயங்களில் உதவி தேவைப்படுகிறது அல்லது தொடர்பற்ற பதில்களை வழங்குகிறார். | உரையாடலில் பங்கேற்க தயங்குகிறார் அல்லது மிகக் குறைந்த பங்களிப்பையே அளிக்கிறார். அவரது பதில்கள் சுருக்கமானவையாக உள்ளன. |
| | பொருத்தமான விளிப்புச் சொற்கள் | உரையாடலின் சூழல், வயது மற்றும் உறவுமுறைக்கு ஏற்ப மிகவும் பொருத்தமான மற்றும் மரியாதைக்குரிய விளிப்புச் சொற்களை திறம்படப் பயன்படுத்துகிறார். | உரையாடலின் சூழலுக்குப் பொருத்தமான மற்றும் மரியாதைக்குரிய விளிப்புச்சொற்களை தவறின்றிப் பயன்படுத்துகிறார். | பொதுவாக விளிப்புச்சொற்களைப் பயன்படுத்துகிறார், ஆனால், சில சமயங்களில் மரியாதை குறைந்த சொற்களை அல்லது சூழலுக்குப் பொருந்தாத சொற்களைப் பயன்படுத்துகிறார். | பெரும்பாலும் விளிப்புச்சொற்களைப் பயன்படுத்துவதில்லை அல்லது தவறான, மரியாதை குன்றிய சொற்களை மட்டுமே பயன்படுத்துகிறார். |
| | பண்பு / மரியாதை | எதிர்த்தரப்பினரின் கருத்துக்களை உறுதியாக ஏற்றுக் கொண்டு மிகுந்த மரியாதையுடனும் கனிவுடனும் பதில் அளிக்கிறார். அவரது மொழிநடை அன்பானது மற்றும் விவாதத்தைத் தூண்டாதது. | எதிர்த்தரப்பினரின் கருத்துக்களுக்கு மரியாதையுடன் செவிமடுத்து பதிலளிக்கிறார். மொழிநடை பண்பானது மற்றும் எளிமையானது. | மரியாதை உள்ளது, ஆனால் சில சமயங்களில் குறைவான ஆர்வத்தை வெளிப்படுத்துகிறார் அல்லது மொழிநடை சற்று அதிகாரமாக உள்ளது. | அடிக்கடி குறுக்கிடுகிறார் அல்லது எதிர்த்தரப்பினரின் கருத்துக்களுக்கு மரியாதை அளிப்பதில்லை மொழிநடை முரட்டுத்தனமாக உள்ளது. |
| | பேச்சுத் தெளிவு மற்றும் | கருத்துகளை மிகத் தெளிவாகவும், | கருத்துகளைத் தெளிவாக வெளிப்படுத்துகிறார். | கருத்துகள் அவ்வப்போது குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. | கருத்துக்களைச் சரியாக வெளிப்படுத்த |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொடர்<br>புத்<br>திறன் | பிழையின்<br>றியும்,<br>தர்க்கரீதியாக<br>வும்<br>வெளிப்படுத்<br>துகிறார்.<br>இலக்கணம்<br>மற்றும்<br>உச்சரிப்பு<br>மிகச்<br>சரியாக<br>உள்ளன. | இலக்கணம்<br>மற்றும்<br>உச்சரிப்பில்<br>சிறிய<br>பிழைகள்<br>இருக்கலாம்,<br>ஆனால்,<br>அவை<br>தொடர்பைப்<br>பாதிக்க<br>வில்லை. | இலக்கணம்<br>அல்லது<br>உச்சரிப்பு<br>பிழைகள்<br>தொடர்பைப்<br>பாதிக்கின்றன. | முடியவில்லை.<br>அதிகமான<br>தடுமாற்றம்<br>மற்றும்<br>பிழைகள்<br>உள்ளன. |

# கற்றற் சந்தர்ப்பம் - 2 தொலைபேசி உரையாடல்

| **கற்றல்பேறுகள்** | **செயலடைவுத் தரம்** | **உள்ளடக்கம்** | **உள்ளடக்க எல்லைகள்** |
|---|---|---|---|
| 1.2 தொலைபேசி உரையாடலில் மதிப்புடனும் பண்புடனும் ஈடுபடுவார். | 1.2.1 தொலைபேசி உரையாடலில் ஈடுபடும் போது கவனிக்கவேண்டிய விடயங்களைக் கூறுவார். (ஐந்து விடயங்கள்) | தொலைபேசி உரையாடலின் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் ஐந்தினைத் தெளிவாக கூறுதல். | கவனிக்கவேண்டிய விடயங்கள் ஐந்தினைக் கூறுதல். |
| | 1.2.2 தொலைபேசி உரையாடலின் போது அழைப்பினை ஏற்படுத்தியவர் கவனிக்க வேண்டிய விடயங்களைக் கருத்திற் கொண்டு உரையாடுவார். (மூன்று நிமிடங்கள்) | அழைப்பினை ஏற்படுத்தியவர் கடைப்பிடிக்க வேண்டியவற்றைப் பின்பற்றி தொலைபேசி உரையாடலில் ஈடுபடுதல். | அழைப்பினை ஏற்படுத்தியவர் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களைக் கருத்திற்கொண்டு மூன்று நிமிடங்களில் உரையாடுதல். |
| | 1.2.3 தொலைபேசி உரையாடலின் போது அழைப்பினைப் பெறுபவர் கவனிக்க வேண்டிய விடயங்களைக் கருத்திற் கொண்டு உரையாடுவார். (மூன்று நிமிடங்கள்) | அழைப்பினைப் பெறுபவர் கடைப்பிடிக்க வேண்டியவற்றைப் பின்பற்றி உரையாடுதல். | அழைப்பினைப் பெறுபவர் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களை கருத்திற்கொண்டு மூன்று நிமிடங்களில் உரையாடுதல். |

**பாடத்தின் நோக்கங்கள்:- (AIMS)**

- அன்றாட வாழ்வில் பல்வேறு தேவைகளுக்காகத் தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய தேவையை அறிந்து கூறுவார்.
- அழைப்பினை ஏற்படுத்துபவராகவும் அழைப்பினைப் பெறுபவராகவும் இருக்க வேண்டிய சூழல் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் என்பதை அறிந்து செயற்படுவார்.
- அழைப்பினை ஏற்படுத்தும்போதும் பெறுகின்ற போதும் சுயமாகவும் பண்பாகவும் உரையாட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து உரையாடுவார்.
- உரையாடும்போது நெகிழும் திறனைக் கடைப்பிடித்து ஒழுகுவார்.

1. **செயற்பாடு:** 1.2.1
2. **காலம் :-** 50 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** தொலைபேசி உரையாடலை அடிப்படையாகக் கொண்ட கலந்துரையாடல்
4. **செயற்பாட்டின்மூலம் மாணவர்கள் அடைந்துகொள்ளவுள்ளவை :-**
   - தொலைபேசி உரையாடலை அவதானமாகக் செவிமடுப்பார்.
   - வினாக்களுக்கு விடையளிப்பார்.
   - தொலைபேசி உரையாடலில் நெகிழும் திறனுடன் பங்குபற்ற முடியும் என்பதை வெளிக்காட்டுவார்.
5. **செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல் :-**
   - தொலைபேசி உரையாடலைச் செவிமடுக்கத்தக்க சூழலை ஏற்படுத்திக் கொடுங்கள்.
   - தொலைபேசி உரையாடலைச் சரியாக அவதானித்துச் செவிமடுக்க வழிகாட்டுங்கள்.
   - வினாக்களுக்கு விடையளிக்கவும் வழிப்படுத்துங்கள்.
   - அளித்த விடைகள் சரியானவையா, என்பதையும் உறுதிப்படுத்துங்கள்.
   - தொலைபேசி உரையாடலில் பங்குபற்றுவதை வெளிக்காட்டச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
6. **தரவிருத்தி உள்ளீடுகள் :-**

   தொலைபேசிகள், வினாக்கள் அடங்கிய செயலட்டைகள்.
7. **இச்செயற்பாட்டின்மூலம் அடைந்துகொள்ளப்படும் திறன்கள் :-**
   - தொடர்பாடல்
   - பொறுப்புக்கூறல்
   - விடாமுயற்சி
   - அக்கறை, நேர்மை
   - நெகிழ்வுத் தன்மை
   - விமர்சனச் சிந்தனை
   - படைப்பாற்றல்
8. **வீட்டுவேலை :-**
   - பெற்றோருடன் அல்லது வீட்டு உறவுகளுடன் தொலைபேசி உரையாடல்களை நடத்தவும் அவற்றின்போது கிடைத்த பிரதிபலிப்புக்களை முன்வைக்கவும் வழிப்படுத்துங்கள்.
9. **பின்தொடர் வேலை / மேலதிக வாசிப்பு :-**
   - தான் நடத்திய உரையாடல்களை மீட்டிப்பார்க்கவும், அவற்றின் மூலம் பெற்றுக் கொண்ட அனுபவங்களை ஒரு சிறு அறிக்கையாக்கவும் வழிகாட்டுங்கள்.

## Rubrics

| செயலடைவுத் தரம் | | நியதி | மிகநன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|---|
| தொலை பேசி உரையாடலில் ஈடுபடும் போது அழைப்பினை ஏற்படுத்தியவர், பெறுபவர், கவனிக்க வேண்டிய விடயங்கள் என்பவற்றைக் கூறுவார். | அழைப்பினை ஏற்படுத்தியவர் | அறிமுகம் மற்றும் நோக்கம் | தெளிவாகவும், பணிவாகவும், சுருக்கமாகவும் தன்னை அறிமுகப் படுத்தி, உரையாடலின் நோக்கத்தை உடனே கூறுகிறார். | தெளிவாகவும், பணிவாகவும், தன்னை அறிமுகப் படுத்தி, உரையாடலின் நோக்கத்தை கூறுகிறார் | தெளிவாகவும், தன்னை அறிமுகப் படுத்தி, உரையாடலின் நோக்கத்தை காலதாமதமாகக்கூறுகிறார். | தன்னை அறிமுகப் படுத்தி, உரையாடலின் நோக்கத்தை வெளிக்காட்டுவதில் சிரமப்படுகிறார். |
| | | பேசும் தொனி மற்றும் மொழி | குரல் தெளிவாகவும், மொழிப் பயன்பாடு மிகச்சிறப்பாகவும் உள்ளன.<br>சரியான தொழில்முறை வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். | குரல் தெளிவாக உள்ளது,<br>தொழில் முறை வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். | குரல் மெல்லியதாகவோ அல்லது சத்தமாகவோ உள்ளது. சில பொருத்தமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். | குரல் மங்கலாகவோ /அதிக சத்தமாகவோ உள்ளது.<br>பெருத்தமற்ற தொனி அல்லது குழப்பமான மொழி உள்ளது. |
| | | கால அட்டவணை/ நேரம் | பேசுவதற்குச் சரியான நேரத்தை கருத்திற்கொண்டு,உரையாடலைச் சுருக்கமாக முடிக்கிறார். | பேசுவதற்குச் சரியான நேரத்தை கருத்திற்கொண்டு,உரையாடலைச் முடிக்கிறார். | உரையாடலை நீளமாக இழுக்கிறார் அல்லது அழைப்புக்கான நேரம் பொருத்தமற்றதாக இருக்கலாம். | சரியான நேரம் தெரியாமல் அழைக்கிறார். உரையாடலை முடிக்கத் தெரியாமல் சிரமப்படுகிறார். |
| | அழைப்பைப் பெறுபவர் | அழைப்பிற்குப் பதிலளித்தல் | அழைப்பிற்குப் பதிலளித்தல் அழைப்பிற்கு உடனடியாகப் பதிலளித்து, தன்னை/நிறுவனத்தின் பெயரைத் தெளிவாகக் கூறி வரவேற்கிறார். | அழைப்பிற்குப் பதிலளிக்கிறார், தன்னைப் பற்றியோ/நிறுவனத்தைப் பற்றியோ கூறுகிறார். | பதிலளிப் பதில் தாமதம் ஏற்படுகிறது அல்லது அறிமுகம் தெளிவாக இல்லை. | அழைப்பைப் புறக்கணிக்கிறார். அல்லது முரட்டுத்தனமாக பதிலளிக்கிறார். |
| | | கவனமாகக் கேட்டல் மற்றும் பதில் | முழுமையான கவனத்துடன் கேட்டு, பொருத்தமான கேள்விகள்/பதில்கள் மூலம் தான் புரிந்து கொண்டதை உறுதிப்படுத்துகிறார். | கவனமாகக் கேட்கிறார். தேவையான சில கேள்விகள் கேட்கிறார்/ பதிலளிக்கிறார். | கவனம் அவ்வப் போது சிதறுகிறது. புரிதலை உறுதிப்படுத்த போதுமான கேள்விகள் கேட்பதில்லை. | குறுக்கிட்டுப் பேசுகிறார். அழைப்பவரின் பேச்சில் கவனம் செலுத்தவில்லை அல்லது பொருத்தமற்ற பதில்களை அளிக்கிறார். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | உதவி செய்தல்/தீர்வு அளித்தல் | தேவையான தகவல்/தீர்வை வழங்குகிறார். அல்லது சரியான நபருக்கு மாற்றுகிறார். அடுத்தகட்ட நடவடிக்கையைத் தெளிவாகக் கூறுகிறார். | தகவல் /தீர்வை வழங்க முயற்சி செய்கிறார். அடுத்த கட்ட நடவடிக்கை பற்றிய தெளிவைக் கூறுகிறார். | தகவல் / தீர்வு வழங்குவதில் தாமதம்/ குழப்பம் உள்ளது. அடுத்தகட்ட நடவடிக்கை தெளிவில்லை. | உதவி செய்வதில் நாட்டமில்லை. பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறார். |
| | பொதுவான விடயங்கள் | பொதுவான விடயங்கள் | உரையாடல் நாகரிகம்"நன்றி", "வணக்கம்" போன்ற மரியாதையான வார்த்தைகளுடன் உரையாடலைத் தொடங்கி, பண்புடன் முடிக்கிறார். | உரையாடல் சில மரியாதையான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். | தேவையான இடங்களில் மரியாதை/ நன்றி தெரிவிக்காமல் உரையாடுகிறார். | மரியாதை இல்லை, சண்டை போடுவது போல உரையாடல் அமைகிறது. |
| | | சூழல் மற்றும் ஒலி தரம் | ஒலி தெளிவாகவும், வெளிப்புற இரைச்சல் இல்லாமலும் உள்ளது. இடையூறுகளைத் தவிர்க்கிறார். | ஒலி பொதுவாகத் தெளிவாக உள்ளது. குறைந்த பட்ச இரைச்சல் உள்ளது. | ஒலி, தரம் குறைவாக உள்ளது. வெளிப்புற இரைச்சல்/ பேச்சு உரையாடலைத் தடுக்கிறது. | அதிக இரைச்சல் உள்ளது. உரையாடலுக்கு இடையூறாக வேறு வேலைகளைச் செய்கிறார். |

1. **செயற்பாடு:** 1.2.2
2. **காலம் :-** 100 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** தொலைபேசியில் உரையாடுதல்
4. **செயற்பாட்டின்மூலம் மாணவர்கள் அடைந்துக்கொள்ளவுள்ளவை :-**
    - தொலைபேசி உரையாடலுக்காகப் பொருத்தமான சந்தர்ப்பத்தை தேர்வு செய்வார்.
    - அழைப்பினை ஏற்படுத்துபவரும் அழைப்பினைப் பெறுபவரும் தத்தம் பொறுப்பினை உணர்ந்து யதார்த்தநிலையில் உரையாடிக்காட்டுவார்.
5. **செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல் :-**

    பொருத்தமான சந்தர்ப்பத்தை தெரிவு செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.

    - தத்தம் பொறுப்பினை உணர்ந்துசெயற்பட வழிகாட்டுங்கள்.
    - உரையாடல் தொடர்பாக உங்கள் அவதானிப்புகளை முன்வையுங்கள்.
6. **தரவிருத்தி உள்ளீடு :-** தொலைபேசிகள்
7. **செயற்பாட்டின்மூலம் அடைந்துகொள்ளக்கூடிய திறன்கள்**
    - படைப்பாற்றல்

- தொடர்பாடல்
- பொறுப்புக்கூறல்
- இணைந்துசெயற்படல்

8. **வீட்டுவேலை:-**
   - வீட்டிலேயே இத்தகைய உரையாடல்களை நடத்த வழிப்படுத்துங்கள்.
   - பெற்ற அனுபவத்தை வகுப்பில் பகிர வழிகாட்டுங்கள்.
9. **பின்தொடர் வேலை :-**
   - வெவ்வேறு காலங்களில் நிகழ்ந்த உரையாடல்கள் தொடர்பாகத் தகவல்களை சேகரிக்க வழிப்படுத்துங்கள்.
   - அவற்றுள் பொருத்தமானவற்றை வாழ்க்கையில் கடைபிடித்து ஒழுக வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துங்கள்.

| **செயலடைவுத் தரம்** | | **நியதி** | **மிகநன்று** | **நன்று** | **சாதாரணம்** | **முன்னேற்றம் தேவை** |
|---|---|---|---|---|---|---|
| தொலைபேசி உரையாட லில் ஈடுபடும் போது அழைப் பினை ஏற்படுத் தியவர், பெறுபவர் கவனிக்க வேண்டிய விடயங் கள் என்பவற்றை க் கருத்திற் கொண்டு உரையா டுவார். | அழைப்பினை ஏற்படுத்தியவர் | அறிமுகம் மற்றும் நோக்கம் | தெளிவாகவும், பணிவாகவும், சுருக்கமாகவும் தன்னை அறிமுகப் படுத்தி, உரையாடலின் நோக்கத்தை உடனே கூறுகிறார். | தன்னை அறிமுகப்ப டுத்துகிறார் நோக்கம் தெளிவாக உள்ளது, ஆனால் சற்று நீண்டிருக்க லாம். | அறிமுகமும் நோக்கமும் உள்ளன, ஆனால் தெளிவு குறைவா கவோ அல்லது காலதாமத மாகவோ இருக்கலாம் . | அறிமுகமோ நோக்கமோ இல்லை அல்லது மிகவும் குழப்பமாக உள்ளது. |
| | | பேசும் தொனி மற்றும் மொழி | குரல் தெளிவாகவும், உற்சாகமா கவும், மரியாதையாக வும் உள்ளது. சரியான தொழில்முறை வார்த்தை களைப் பயன்படுத் துகிறார். | குரல் தெளிவாக உள்ளது, ஆனால் தொனி சற்று சமநிலை யில் இல்லை. பொருத்த மான வார்த்தைக ளைப் பயன்படுத் துகிறார். | குரல் மெல்லியதா கவோ அல்லது சத்தமா கவோ உள்ளது. சில பொருத்தம ற்ற வார்த்தைக ளைப் பயன்படு த்தலாம். | குரல் மங்கலாகவே ா.:.அதிக சத்தமாகவோ உள்ளது. மரியாதை யற்ற தொனி அல்லது குழப்பமான மொழி உள்ளது. |
| | | கால அட்டவணை/ நேரம் | பேசுவதற்குச் சரியான நேரத்தை உறுதிசெய்து, உரையா டலைச் சுருக்கமாகவும், இலக்கின்படியும் முடிக்கிறார். | உரிய நேரத்தில் அழைக் கிறார் பெரும் பாலும் சுருக்க மாகப் பேசுகிறார். | உரை யாடலை நீளமாக இழுக்கிறார் அல்லது அழைப்பு க்கான நேரம் பொருத்தம ற்றதாக இருக்கலாம் . | சரியான நேரம் தெரியாமல் அழைக கிறார். உரையா டலை முடிக்கத் தெரியாமல் சிரமப்படு கிறார். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அழைப்பைப் பெறுபவர் | அழைப்பிற்குப் பதிலளித்தல் | அழைப்பை உடனடியாகப் பதிலளித்து, தன்னை/நிறுவனத்தின் பெயரைத் தெளிவாகக் கூறி வரவேற்கிறார். | அழைப்பிற் குப் பதிலளிக் கிறார், தன்னைப் பற்றியோ/ நிறுவனத் தைப் பற்றியோ கூறுகிறார். | பதிலளிப் பதில் தாமதம் ஏற்படு கிறது, அல்லது அறிமுகம் தெளிவாக இல்லை. | அழைப்பைப் புறக்கணித் தல் அல்லது முரட்டுத்தன மாக பதிலளித்தல். |
| | | கவனமாகக் கேட்டல் மற்றும் பதில் | முழுமையான கவனத்துடன் கேட்டு, இடைமறிக் காமல், பொருத்தமான கேள்விகள்/ பதில்கள் மூலம் தான் புரிந்து கொண்டதை உறுதிப்படுத்து கிறார். | கவனமாகக் கேட்கிறார் தேவையா ன சில கேள்விகள் கேட்கிறார்/ பதிலளிக் கிறார். | கவனம் அவ்வப் போது சிதறுகிறது. புரிதலை உறுதிப் படுத்த போதுமான கேள்விகள் கேட்ப தில்லை. | குறுக்கிட்டுப் பேசுகிறார். அழைப்ப வரின் பேச்சில் கவனம் செலுத்தவில் லை அல்லது பொருத்த மற்ற பதில்களை அளிக்கிறார். |
| | | உதவி செய்தல்/தீர்வு அளித்தல் | தேவையான தகவல்/தீர்வை வழங்குகிறார். அல்லது சரியான நபருக்கு மாற்றுகிறார். அடுத்தகட்ட நடவக்கை யைத் தெளிவாகக் கூறுகிறார். | தகவல்/ தீர்வை வழங்க முயற்சி செய்கிறார். அடுத்த கட்ட நடவடிக்கை க பற்றிய தெளிவைக் கூறுகிறார். | தகவல்/ தீர்வு வழங்கு வதில் தாமதம்/ குழப்பம் உள்ளது. அடுத்தகட்ட நடவடிக்கை தெளி வில்லை. | உதவி செய்வதில் நாட்ட மில்லை. பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறார். |
| பொதுவான விடயங்கள் | | உரையாடல் நாகரிகம் | “நன்றி“, “வணக்கம்“ போன்ற மரியாதையான வார்த்தை களுடன் உரையா டலைத் தொடங்கி, பண்புடன் முடிக்கிறார். | பெரும் பாலும் மரியாதை யான வார்த்தைக ளைப் பயன்படுத் துகிறார். | தேவை யான இடங்களில் மரியாதை/ நன்றி தெரிவிப்பதி ல்லை. | மரியாதை இல்லை, சண்டை போடுவது போல உரையாடல் அமைகிறது. |
| | | சூழல் மற்றும் ஒலி தரம் | ஒலி தெளிவா கவும், வெளிப்புற இரைச்சல் இல்லாமலும் உள்ளது. இடையூறு களைத் தவிர்க்கிறார். | ஒலி பொது வாகத் தெளிவாக உள்ளது. குறைந்த பட்ச வெளிப்புற இரைச்சலை கவனம் எடுக்கிறார். | ஒலி தரம் குறைவாக உள்ளது. வெளிப்புற இரைச்சல்/ உரையாடத் தடுமாறுகிற ார். | அதிக இரைச்சல் உள்ளது. உரையாட லுக்கு இடையூறாக வேறு வேலை களைச் செய்கிறார். |

# கற்றற் சந்தர்ப்பம் - 03 தலைப்புக்கேற்ப பேசுதல்

| கற்றல்பேறுகள் | செயலடைவுத் தரம் | உள்ளடக்கம் | உள்ளடக்க எல்லைகள் |
|---|---|---|---|
| 1.3<br>மேடைப்பேச்சில், வழங்கப்படும் தலைப்பிற்கேற்ப அவையஞ்சாமையுடன் நிகழ்த்துவார். | 1.3.1<br>பேச்சொன்றைச் செவிமடுக்கும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்களைக் கூறுவார்.<br>(மூன்று விடயங்கள்)<br><br>1.3.2<br>பேச்சொன்றுக்கு பொருத்தமான விடயங்களை தர்க்கரீதியாக ஒழுங்குப்படுத்தி தெளிவான உச்சரிப்புடனும் பொருத்தமான தொனி, மெய்ப்பாடுகளுடனும் விழா ஒன்றுக்கான பேச்சினை, அவையஞ்சாமையுடன் நிகழ்த்துவார். | தலைப்புக்கு ஏற்ப பேசுதல்<br>சுற்றாடல்,<br>தாய் நாடு,<br>விழுமியங்களைக் கடைப்பிடிப்போம்,<br>சுவாமி விபுலானந்தர் | பேச்சொன்றைச் செவிமடுக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் மூன்றினைக் கூறுதல்.<br>- ஆரம்பம்<br>- மெய்ப்பாடு<br>- நிறைவுறும் விதம்.<br><br>பேச்சொன்றுக்கு பொருத்தமான விடயங்களைக் கருத்திற் கொண்டு<br>- அவையஞ்சாமையுடன் பேசுதல்.<br>- தலைப்பின்கீழ் பேசுதல்<br>- தகவல் சேகரிப்பு<br>- தகவல் ஒழுங்கமைப்பு<br>- தொனிவேறுபாடு<br>- உள்ளடக்கம்<br>- ஏற்ற இரக்கம்<br>- மெய்படு<br>- நிறைவுசெய்தல் |

**பாடத்தின் நோக்கங்கள் :- (AIMS)**

- பேச்சொன்றை செவிமடுத்துக் கேட்க வேண்டும் என்பதையும் மற்றவர்க்கு இடையூறின்றி தமது செயற்பாட்டினை முன்னெடுக்க வேண்டும் என்பதையும் அறிந்து கூறுவார்.
- இச்செயற்பாடுகளை சரிவர முன்னெடுக்கும்போது சிறந்த பேச்சாளுமை கொண்ட ஒருவராகத் தம்மை இனங்காட்டுவார்.
- ஒழுங்குமுறைப்படியான, சீரான பேச்சினை நிகழ்த்திக் காட்டுவார்.
- படைப்பாற்றல் திறனுடையவர் என்பதை வெளிக்காட்டுவார்.

1. **செயற்பாடு:** 1.3.1
2. **காலம் :-** 50 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** அமைதியாகவும் அவதானத்துடனும் பேச்சினை செவிமடுத்தல்.
4. **செயற்பாட்டின்மூலம் மாணவர்கள் அடைந்துக்கொள்ளவுள்ளவை :-**
   - அக்கறையுடன் பேச்சினை செவிமடுப்பார்.
   - அவதானத்துடன் பேச்சினை செவிமடுப்பார்.
   - மற்றவர்க்கு இடையூறின்றிப் பேச்சினை செவிமடுப்பார்.
   - பேச்சொன்றை நிகழ்த்திப் படைப்பாற்றலை வெளிக்காட்டுவார்.
5. **செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல் :-**
   - பேச்சினை செவிமடுப்பதற்கான சூழலை ஏந்படுத்திக்கொடுங்கள்.
   - அக்கறையுடனும் அவதானத்துடனும் செவிமடுக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்கூறுவார்.
   - மற்றவர்க்கு இடையூறு செய்யாமல் பேச்சினை கேட்க வழிப்படுத்தல்.
   - அவதானித்த பேச்சின்மூலம் தன்னாலும் பேச்சொன்றை சிறப்பாக நிகழ்த்திக் காட்டமுடியும் என்பதை வெளிக்காட்ட வழிப்படுத்துங்கள்.
6. **தரவிருத்தி உள்ளீடுகள் :-**

ஒலிவாங்கி / ஒலிப்பதிவுசெய்யப்பட்ட பேச்சு.

7. **இச்செயற்பாட்டின்மூலம் அடைந்துகொள்ளப்படும் திறன்கள் :-**
   - அக்கறை, நேர்மை
   - படைப்பாற்றல்
   - தொடர்பாடல்
8. **வீட்டுவேலை :-**
   - வேறுபட்ட வேறுபட்ட இரண்டு பேச்சுக்களை செவிமடுக்கச் சொல்லுங்கள்.
   - அப்பேச்சுப் பற்றிய கருத்துக்களை முன்வைக்கச் செய்யுங்கள்.
   - அந்தப் பேச்சுக்களுள் ஏதாவது ஒன்றை பேசிக்காட்டச் செய்யுங்கள்.
9. **பின்தொடர் வேலை :-**
   - வலையொளியில் (Youtube) வெளியாகியுள்ள இலக்கியப் பேச்சொன்றினை கவனிக்க வழிசெய்யுங்கள்.
   - அந்தப் பேச்சைத் தான் (மாணவன்) நிகழ்த்தியிருந்தால் அது எப்படியிருக்கும் என்பதை எடுத்துக்காட்ட வழிப்படுத்துங்கள்.

| செயலடைவுத் தரம் | நியதி | மிகநன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| பேச்சொன்றைச் செவிமடுக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களைக் கூறுவார். (மூன்று விடயங்கள்) | கவனமாக கேட்டல் | கவனமாக கேட்கும் திறன், பேச்சாளரின் வார்த்தைகளை முழுமையாக, இடையூறு இல்லாமல் கவனிக்கிறார். | தொடர்ச்சியாக கவனிக்கிறார். | சில நேரங்களில் கவனிக்கிறார். | கவனம் செலுத்துவது குறைவு |
| | பேச்சாளரை மதித்தல், குறுக்கிடாமை. | உடல் மொழி மற்றும் கண்காணிப்பு கண் தொடர்பு, தலையாட்டல், உடல் சைகைகள் மூலம் ஆர்வம் காட்டுவது. பேச்சாளரை மதிப்பது மற்றும் குறுக்கிடாமை, பேச்சை இடைமறிக்காமல், மரியாதையுடன் கேட்கிறார். | தெளிவான உடல் மொழி உண்டு, முறையாகக் கவனிக்கிறார். | சில நேரங்களில் உடல் மொழி காட்டுகிறார். சில நேரங்களில் இடைமறிக்கிறார். | எந்த உடல் மொழியும் இல்லை அடிக்கடி இடைமறிக்கிறார். |

1. **செயற்பாடு:** 1.3.2 & 1.3.3
2. **காலம் :-** 100 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** சட்டகம் அமைத்ததுப் பேசும்போது ஒழுங்குமுறையைப் பின்பற்றி பேசுதல்.
4. **இச்செயற்பாடுகளின் மூலம் மாணவர்கள் அடைந்துக்கொள்ளவுள்ளவை :-**
    - சட்டகம் அமைத்துப் பேசுவது சிறப்பானது என்பதை எடுத்துக்காட்டுவார்.
    - பேசும்போது ஓர் ஒழுங்குமுறையில் பேசுவது பொருத்தமான பேச்சாக அமையும் என்பதை விளங்கிப் பேசுவார்.
    - பேச்சின்போது சமகாலச் சவால்களுக்கு முகங்கொடுக்கும் திறனை பெற்றுக்கொள்ளுவார்.
5. **செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்**
    - பேச்சின் தலைப்புக்கேற்ப சட்டகம் அமைக்கப்படுவதன் அவசியத்தை உணர்த்துங்கள்.
    - சட்டக மாதிரிகளைக் காட்டி கிரகிக்க வழிப்படுத்துங்கள்.
    - வெவ்வேறு இரண்டு தலைப்புகளில் சட்டகம் அமைக்க வழி காட்டுங்கள்.
    - ஒழுங்குமுறைப்படி பேச வழிப்படுத்துங்கள்.

- செயற்றிட்ட அடிப்படையிலான கற்றல் அணுகுமுறையினைக் கையாளுங்கள். (PBL

**6. தரவிருத்தி உள்ளீடுகள் :-**

மாதிரி பேச்சு சட்டகங்கள், டிமைன்தாள், எழுதுகருவிகள்.

**7. இச்செயற்பாட்டின்மூலம் அடைந்துகொள்ளப்படும் திறன்கள் :-**

- அக்கறை, நேர்மை
- படைப்பாற்றல்
- தொடர்பாடல்

**8. வீட்டுவேலை :-**

- வெவ்வேறு இரண்டு தலைப்புகளில் சட்டகம் அமைக்க வழிப்படுத்துங்கள்.
- அதனை மதிப்பீடு செய்து விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.

**9. பின்தொடர் வேலை :-**

- உரிய தலைப்புக்கேற்ற விதத்தில் பொருத்தமாகச் சட்டகங்கள் அமைக்கவும் அவற்றை ஓர் ஒழுங்குமுறையில் பேசவும் வழிப்படுத்துங்கள். (குறிப்பிட்ட கால அவகாசத்துக்குப் பிறகு).

| **செயலடைவுத் தரம்** | **நியதி** | **மிகநன்று** | **நன்று** | **சாதாரணம்** | **முன்னேற்றம் தேவை** |
|---|---|---|---|---|---|
| சட்டகம் அமைத்தும் ஒழுங்கு முறையிலும் பேசவேண்டும் என்பதை முன்வைப்பார். | தொடக்கம், நடு, முடிவு, தெளிவு | தொடக்கம், நடு, முடிவுடன் தெளிவாகப் பேசுகிறார். | தொடக் கம், நடு, முடிவுடன் பேசுகிறார். | சில கட்டமை ப்பு உள் ளது. | அமைப் பின்றி பேசுகிறார். |
| | தொடர்ச்சி, தகவல் ஒழுங்கு, எண்ணத் தெளிவு | தொடர்ச்சி மற்றும் தகவல்களின் ஒழுங்கு எண்ணங்கள் குழப்பமின்றி, தொடர் வழியில் பேசுகிறார். | சிறந்த தகவல் ஒழுங்குட ன் பேசுகிறார். | ஓரளவு ஒழுங்குடன் பேசுகிறார். | எண்ணங்களி ல் குழப்பமுடன் பேசுகிறார். |
| | மொழி நடை, நடத்தைப் பண்பு | மொழி ஒழுங்கும் நடைமுறையும், எழுத்துப்பிழை இன்மை, நயமான தமிழ் நடை, சரியான வாக்கிய அமைப்பு மற்றும் மரியாதையான சொற்கள் கையாள்கிறார். | மொழி ஒழுங்கு, சரியான வாக்கிய அமைப்புட ன் பயன்படுத் துகிறார். | சில பிழை கள் உள் ளன. | தவறுகள் அதிகம். |

# கற்றற் சந்தர்ப்பம் - 4 பல்வகை ஊடக முன்வைப்பு

| **கற்றல்பேறுகள்** | **செயலடைவுத் தரம்** | **உள்ளடக்கம்** | **உள்ளடக்க எல்லைகள்** |
|---|---|---|---|
| 1.4 பொருத்தமான ஊடகங்களைப் பயன்படுத்தி, முன்வைப்பினை நிகழ்த்துவார். | 1.4.1 பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி முன்வைப்பொன்றினை மேற்கொள்ளும் போது கவனிக்க வேண்டிய விடயங்களைக் கருத்திற் கொண்டு பொருத்தமான திட்டத்தினைத் தயாரிப்பார்.<br><br>1.4.2 ஊடகங்களுள் குறைந்தது இரண்டையேனும் பயன்படுத்தி மேற்கொள்ளும் முன்வைப்புக்குப் பொருத்தமான உபகரணங்களையும் அவற்றின் பகுதிகளையும் தயாரிப்பார்.<br>1.4.3 இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட ஊடகங்களைப் பயன்படுத்தி முன்வைப்பினை மேற்கொள்வார்.<br>(ஐந்து நிமிடங்கள்) | பல்வகை ஊடக முன்வைப்பு<br><br>பொருத்தமான உபகரணங்களையும் அவற்றின் பகுதிகளை தயாரித்தல்.<br><br>ஒன்றிற்கு மேற்பட்ட ஊடகங்களைப் பயன்படுத்தி முன்வைப்பினை மேற்கொள்ளல். | கவனிக்க வேண்டிய விடயங்களைக் கொண்டு திட்டத்தை தயாரித்தல்.<br><br>பேச்சு, நடிப்பு,நடனம், சித்திரம், இசை<br><br>குறைந்தது இரண்டையேனும் பயன்படுத்துதல்.<br><br>காணொளி, திறன்பலகை |

**பாடத்தின் நோக்கங்கள் :- (AIMS)**

- பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தும்போது அது ஆக்கபூர்வமான முன்வைப்பாக அமையும் என்பதை அறிந்து கூறுவார்.
- பல்வேறு ஊடகங்கள் பல்வேறு கருவிகளுக்கிடையேயான வேறுபாடுகளை இனங்கண்டு முன்வைப்பினைத் திட்டமிட்டுக்காட்டுவார்.
- சீராக ஒழுங்குமுறைப்படி முன்வைப்பார்.
- அக்கறை, நேர்மை, விடாமுயற்சி முதலிய வாழ்க்கைத் திறனுடையவராகச் செயற்படுவார்.

1. **செயற்பாடு :-** 1.4.1 & 1.4.2
2. **காலம் :-** 50 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** வினாக்களுக்கு விடையளிப்பதோடு திட்டத்தைத் தயாரித்தல்.
4. **இச்செயற்பாடுகளின்மூலம் மாணவர்கள் அடைந்துக்கொள்ளவுள்ளவை :-**
    - பல்வகை ஊடகங்களை முன்வைப்பதற்குத் தேவையான அடிப்படை அறிவை பெற்றுக்கொள்வார்.
    - பொருத்தமான மொழியைப் பயன்படுத்துவார்.
    - விடயத்துக்குப் பொருத்தமான தலைப்பைச் தெரிவுசெய்வார்.
    - ஒன்றுக்கு மேற்பட்ட பல்லூடகங்களைப் பயன்படுத்தி தகவல் தொடர்பாடல் திறனுடன் பொருத்தமான திட்டத்தைத் தயாரிப்பார்.
5. **செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள் :-**
    - குறித்த நேரத்திற்குள் வினாக்களுக்கு விடையளிக்க வழிப்படுத்துங்கள்.
    - முன்வைப்புக்கு தயாராகுவதற்கு தேவையான ஒழுங்குமுறைககளை ஞாபகப்படுத்துங்கள்.
    - குறித்த நேரத்துக்கு ஏற்ப திட்டத்தை தயாரிக்க வழிப்படுத்துங்கள்.
    - வலுகுவி அறிக்கை (Power Point Presentation) மூலம் முன்வைப்புப் பக்கங்களை (Slides) உருவாக்க வழிப்படுத்துங்கள்.
6. **தரவிருத்தி உள்ளீடுகள் :-**
    பல்லூடகக் கருவிகள், எழுதுகருவிகள்.
7. **இச்செயற்பாட்டின் மூலம் அடைந்துகொள்ளப்படும் திறன்கள்**
    - தொடர்பாடல்
    - பொறுப்புக்கூறல்
    - விடாமுயற்சி
    - அக்கறை,நேர்மை
    - படைப்பாற்றல்
    - விமர்சன சிந்தனை
8. **வீட்டுவேலை :-**
    - குடும்ப அங்கத்தவர்களுடன் அல்லது நண்பர்களுடன் இணைந்து பல்லூடக முன்வைப்பைச் செய்து, அது தொடர்பான அறிக்கையைப் பெற்று, அதனை மதிப்பீடு செய்து வழிப்படுத்துங்கள்.
9. **பின்தொடர் வேலை**
    - பல்வகை ஊடக முன்வைப்புக்களைப் பார்க்கின்ற சந்தர்ப்பங்களின் போது அவை பற்றிய குறிப்புக்களை எழுதி அவை தொடர்பாக தங்களுடன் கலந்துரையாட வழிப்படுத்துங்கள்.

| **செயலடைவுத் தரம்** | **நியதி** | **மிகநன்று** | **நன்று** | **சாதாரணம்** | **முன்னேற்றம் தேவை** |
|---|---|---|---|---|---|
| பல்வகை ஊடகங் களைப் பயன்படுத்தி முன்வைப்பு ஒன்றினை மேற்கொள் ளும்போது கவனிக்க வேண்டிய விட யங்களைக் கருத்திற் கொண்டு பொருத்தமான திட்டத்தினைத் தயாரிப்பார். | ஊடகத் தேர்வு | முன்வைப்புக் குப் பொருத்தமான பல்வேறு ஊடகங்களை (வீடியோ, படங்கள், அஞ்சல், பேச்சு, டிஜிட்டல்) தேர்வு செய்துள்ளார். | முன்வைப்புக் குப் பொருத்தமா ன சில ஊடகங்கள ள சரியாகத் தெரிவு செய்துள்ளார் | சில ஊடகங்களை ஓரளவு பயன்படுத்து கிறார். | ஊடகத் தெரிவு பொருத்த மில்லை. |
| | திட்டம், அமைப்பு மற்றும் ஒழுங்கு | முன்வைப்புக்க ான திட்டம், அமைப்பு, ஒழுங்காக பயன்படுத்தியு ள்ளார். | முன்வைப்புக் கான திட்டம் அமைப்பினை ப் பயன்படுத்தி யுள்ளார். | முன்வைப்புகா ன திட்டம் ஓரளவு முறையாகப் பயன்படுத்தியு ள்ளார். | முன்வைப்புக ான திட்டத்தை முறையாகப் பயன்படுத்த வில்லை. |
| | ஒருங்கி ணைப்பு | ஊடகங்களின் ஒருங்கி ணைப்பு பல்வேறு ஊடகங்கள் ஒன்றுடன் ஒன்றாக இணைந்து கருத்தை விளக்கு கின்றன. | ஊடகங்களி ன் ஒருங்கி ணைப்பு சில ஒருங்கிணை க்கின்றன. | சில ஒருங்கி ணைப்பு உள்ளது. | ஊடகங்கள் தனித்த னியாக பயன்படுத்தப் பட்டுள்ளன. |
| | தகவல் தரம் மற்றும் தெளிவு | முன்வைப்பில் உள்ள தகவலகள் சரியானதாகவு ம் விளக்கமாகவு ம் உள்ளன. | முன்வைப்பில் உள்ள சில தகவல் தெளிவாக வும், சரியாக வும் உள்ளன. | தகவல் ஓரளவு சராசரியாக உள்ளது. | தகவல் தவறானது அல்லது குழப்பமா னது. |
| | நேர் மாறும் சிக்கல் களை எதிர் கொள்வது திட்டத்தை செயல் படுத்தல். | நேர்மாறும் சிக்கல்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் முன்வைக்கப் பட்டுள்ளன. | சிக்கல்கள் மற்றும் தீர்வுகள் முறையாக பட்டுள்ளன. | சில சிக்கல்கள் கவனிக்கப் பட்டன. | சிக்கல்களை கவனிக்க வில்லை. |

1. **செயற்பாடு :-** 1.4.3
2. **காலம் :-** 50 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** பல்வகை ஊடக முன்வைப்புக்கான முன்னாயத்தம் செய்தல்.
4. **இச்செயற்பாட்டின் மூலம் மாணவர்கள் அடைந்துக்கொள்ளவுள்ளவை :-**
    - தத்தம் இயலுமைக்கேற்ப தலைப்புக்களை தெரிவுசெய்வார்.
    - குறிப்பிட்ட நேரத்திற்குள் முன்வைப்புக்கேற்ப திட்டத்தை தயாரிப்பார்.
    - வலுகுவி அறிக்கை ((Power Point Presentation) மூலம் முன்வைப்புப் பக்கங்களை தயாரித்துக் காட்டுவார்.
    - குறிப்பிட்ட நேரத்திற்குள் முறைப்படி முன்வைப்புச் செய்வார்.
    - தனது படைப்பாற்றல் திறனை வெளிப்படுத்துவார்.
5. **செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல் :-**
    - பொருத்தமான முறையில் செயற்பாட்டுக்கேற்ப மாணவர்களை குழுக்களாக்குங்கள்.
    - பல்வகை ஊடக முன்வைப்புக்குப் பொருத்தமான உபகரணங்களைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.
    - அந்த உபகரணங்கள் சீராகத் தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துங்கள்.
6. **தவிருத்தி உள்ளீடுகள் :-**

   எழுதுகருவிகள், டிமைன் தாள்கள், திறன்பலகை, கணனி.
7. **இச்செயற்பாட்டின் மூலம் அடைந்துகொள்ளப்படும் திறன்கள்:-**
    - அக்கறை,நேர்மை
    - விடாமுயற்சி
    - தொடர்பாடல்
    - படைப்பாற்றல்
    - விமர்சன சிந்தனை
8. **வீட்டுவேலை :-**
    - குறித்த காலப்பகுதிக்குள் வேறு இரண்டு உபகரணங்களையும் அவற்றின் பகுதிகளையும் தயாரிக்கச் செய்யுங்கள்.
    - அவற்றை மதிப்பிடுங்கள்
    - அவை தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
9. **பின்தொடர் வேலை**
    - வெவ்வேறு இடங்களில் தயாரிக்கப்பட்ட உபகரணங்களையும் அவற்றின் பகுதிகளையும் பார்வையிட்டுக் கருத்துக்களை அறிக்கைப்படுத்தி வழிப்படுத்துங்கள்

| செயலடைவுத் தரம் | நியதி | மிகநன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| ஊடகங்களுள் குறைந்தது இரண்டையேனும் பயன்படுத்தி மேற்கொள்ளும் முன்வைப்புக்குப் பொருத்தமான உபகரணங்களையும் அவற்றின் பகுதிகளை தயாரிப்பார். | ஊடகத் தேர்வு சரியானது | முன்வைப்பிற்கு பொருத்தமான பல்வேறு ஊடகங்களை (வீடியோ, படங்கள், அஞ்சல், பேச்சு, டிஜிட்டல்) தேர்வு செய்துள்ளார். | சரியான ஊடகத்தைத் தேர்வு செய்துள்ளார். | சில ஊடகங்கள் பொருந்தும் | ஊடகத் தேர்வு பொருத்தமில்லை. |
| | திட்டம் அமைப்பு மற்றும் ஒழுங்கு | முன்வைப்பின் நோக்கம் தெளிவாக, தொடக்கம், நடு, முடிவு ஆகிய பகுதிகளும் ஒழுங்காக உள்ளது. | திட்டம் முறையாக அமைந்துள்ளது. | திட்டம் சில முறையாக அமைந்துள்ளது. | திட்டம் குழப்பமானது. |
| | ஊடக உபகரணங்கள் தேர்வு | நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட ஊடக உபகரணங்களைத் தேர்வு செய்துள்ளார். | மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட உபகரணங்கள். | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உபகரணங்கள். | ஓர் ஊடக உபகரணத்தைத் தெரிவு செய்துளார். |
| | உபகரணங்களின் பகுதிகளின் முழுமை | ஒவ்வொரு உபகரணத்திற்கும் தேவையான பகுதிகள் (படங்கள், உரைகள், ஒலிகள், வீடியோக்கள், விளக்கங்கள்) முழுமையாக தயாரிக்கப் பட்டுள்ளன. | அனைத்து பகுதிகளும் முழுமையாக தயாரிக்கப்பட்டுள்ளன. | சில பகுதிகள் தயாரிக்கப்பட்டுளன. | பகுதிகள் அரை நிறைவு. |
| | உபகரணங்களின் பொருத்தத் தன்மை | தேர்வு செய்யப்பட்ட உபகரணங்கள் முன்வைப்பிற்கு பொருத்தமானவை. | மிகவும் பொருத்தமானவை. | ஓரளவு பொருத்தமானவை. | பொருத்தமற்றவை. |
| | தயாரிப்பு துல்லியம் மற்றும் ஒழுங்கு | உபகரணங்களும் அவற்றின் பகுதிகளும் தெளிவாக, கவர்ச்சியாக, ஒழுங்காக தயாரிக்கப் பட்டுள்ளன. | சிறந்த ஒழுங்கு மற்றும் துல்லியம். | சராசரி ஒழுங்கு. | குறைவான ஒழுங்கு மற்றும் துல்லியம். |
| | இணைத்துப் பயன்படுத்துதல் | இரு ஊடக உபகரணங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து சிறப்பாக செயல்படுகிறது. | முழுமையான இணைப்பு மற்றும் ஒருங்கிணைவு உள்ளது. | சில இணைப்பு உண்டு. | இணைப்பு இல்லை. |

# மொடியூல் - 2

# கற்றற் சந்தர்ப்பம் - 01 வாழ்த்து மடல் தயாரிப்போம்

| **கற்றல் பேறுகள்** | **செயலடைவுத் தரம்** | **உள்ள டக்கம்** | **உள்ளடக்க எல்லைகள்** |
|---|---|---|---|
| 1.5<br>வாழ்த்துமடல் களைப் பொருத்த மாகவும் ஆக்கத் திறனுடனும் தயாரிப்பார். | 1.5.1<br>வாழ்த்துமடல் தொடர்பாக அறிந்து அதன் பண்புகளைச் சுருக்கமாகக் கூறுவார்.<br>1.5.2<br>வழங்கப்பட்ட வாழ்த்துமடலை அடிப்படையாகக் கொண்டு அதிலே காணப்படும் பண்புகளை இனங்கண்டு எழுதுவார். (நான்கு பண்புகள்)<br>1.5.3<br>நடைமுறை வாழ்க்கையில் வாழ்த்துமடல் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களைக் கூறுவார்.<br>(நான்கு சந்தர்ப்பங்கள்)<br>1.5.4<br>வாழ்த்துமடலின் அடிப்படைப் பண்புகள் அமைய வழுவற்ற எழுத்துப் பிரயோகம், நிறுத்தக்குறி முதலானவற்றை அனுசரித்து வாழ்த்துமடல் ஒன்றைத் தயாரிப்பார்.<br>(இருபது சொற்கள்) | வாழ்த்து மடல்<br><br>பிறந்தநாள் | வாழ்த்து மடலின் பண்புகள்.<br>- அட்டை<br>- சொல் அளவு<br>- வடிவமைப்பு<br>- மொழி<br><br>வாழ்த்துமடல் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள்.<br><br>- பிறந்தநாள்,<br>- பாராட்டு |

**பாடத்தின் நோக்கங்கள் :- (AIMS)**

- வாழ்த்துமடல் பற்றி அறிந்து கூறுவார்.
- வாழ்த்துமடல் ஒன்றில் காணப்பட வேண்டிய பண்புகளை அறிந்து கூறும் திறன் பெறுவார்.
- வாழ்த்துமடல் பற்றி அறிந்து கொண்டதற்கேற்ப வாழ்த்துமடல் ஒன்றைத் தயாரிப்பார்.

1. **செயற்பாடு :-** 2.1.1
2. **காலம் :-** 50 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** வாழ்த்துமடல் தயாரித்தல்.
4. **செயற்பாட்டின் மூலம் மாணவர் அடைந்துக்கொள்ள வேண்டியவை :-**
    - வாழ்த்து மடல் என்றால் என்னவென்பதை அறிந்து கூறவார்.
    - வாழ்த்து மடல் தயாரிப்பதற்கான திட்டமிடலை மேற்கொள்ள அறிந்து கூறுவார்.
    - வாழ்த்துமடல் வழங்கப்படும் பல்வேறு சந்தர்ப்பங்களை அறிந்து, தனது படைப்பாற்றல் திறனை வெளிக்காட்டுவார்.
5. **செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல் :-**
    - மொடியூலில் தரப்பட்டுள்ள விடயத்தை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்.
    - இங்கு கூறப்பட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுங்கள்.
    - வாழ்த்துச் செய்தி ஒன்று அமையவேண்டிய முறையை விளக்கி வாழ்த்துச் செய்தியொன்றை எழுதுவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.

6. **தரவிருத்தி உள்ளீடு :-**
    - மாதிரி வாழ்த்து மடல்கள்
7. **செயற்பாட்டின் மூலம் அடைந்து கொள்ளப்படும் திறன்கள் :-**
    - விமர்சனச் சிந்தனை
    - தொடர்பாடல் திறன்
    - படைப்பாற்றல்
    - பொறுப்புக்கூறல்
8. **பின்தொடர் வேலை :-**
    - பொருத்தமான தலைப்பொன்றில் வாழ்த்துச் செய்தி ஒன்றை எழுதி வரும்படி வழிப்படுத்துதல்.
9. **மேலதிக வாசிப்பு :-**
    - பல்வேறு ஊடகங்களின் வாயிலாக வாழ்த்துமடல்களைத் தேடி அவற்றை வாசித்துக் குறிப்பெடுக்க வழிப்படுத்துங்கள்.

| **செயலடைவுத் தரம்** | **நியதி** | **மிகநன்று** | **நன்று** | **சாதாரணம்** | **முன்னேற்றம் தேவை** |
|---|---|---|---|---|---|
| வாசிப்பதற்கு வழங்கப்பட்ட வாழ்த்துமடலை அடிப்படையாகக் கொண்டு அதில் காணப்படும் நான்கு பண்புகளை விளங்கிக் கூறுவார். | பண்புகளை அடை யாளம் காண்தல் | வாழ்த்துமடலி ல் உள்ள முக்கிய மான நான்கு பண்புகளை தெளிவாக கண்டறிந் திருக்கிறார். | மூன்று பண்பு களைத் தெளிவாக கண்டறிந் துள்ளார். | ஒன்றிரண்டு பண்பு களை கண்டறிந்து ள்ளார். | பண்புகளை அடையாளம் காண்பதில் தவறுகிறார். |
| | பண்புகளை விளக்கும் திறன் | கண்டறிந்த பண்புகளை சரியான முறையில் விளக்கி உள்ளார். | விளக் கங்கள் தெளிவா கவும் முழுமை யாகவும் உள்ளன. | சில விளக்கங்க ள் சரியானவை வயாக உள்ளன. | விளக்கம் சரியில்லை அல்லது பிழைகள் உள்ளன. |
| | உதாரணங் களுடன் விளக்கம் | ஒவ்வொரு பண்புக்கும் பொருத்த மான உதார ணங்கள் அல்லது விளக்கங்கள் வழங்கியுள் ளார். | அனைத்து பண்புகளு க்கும் பொருத் தமான உதாரணங் கள் கொடுத் துள்ளார். | சில உதார ணங்கள் உள்ளன. | உதாரணங் கள் குறைவு. |
| | மொழி மற்றும் அமைப்பு | மொழிநடை விளக்கமாகவும் நயமாகவும்,தெ ளிவாகவும் அமைந்து ள்ளது. | மொழிநடை விளக்கமா க அமைந்து ள்ளது. | மொழிநடை ஓரளவு காணப்ப டுகின்றது. | மொழிநடை குழப்பமாக அல்லது தவறுகளாக காணப்படுகி ன்றன. |

1. **செயற்பாடு :-** 2.1.2
2. **காலம் :-** 50 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** வாழ்த்துமடல் தயாரித்தல்.
4. **செயற்பாட்டின்மூலம் மாணவர் அடைந்துக்கொள்ளவுள்ளவை :-**
    - வாழ்த்துமடல் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களை அறிவார்.
    - பொருட்களுக்கான பட்டியல் ஒன்றைத் தயாரித்துக் கொள்வார்.
    - மொடியூலில் கூறப்பட்டவற்றை அவதானித்து அதற்கேற்றவாறு குழுக்களாக இணைந்து வாழ்த்து மடல்களை தயாரிப்பார்.
    - தயாரித்த வாழ்த்து மடலின் நிறைகுறைகளை அறிந்து கூறுவார்.
5. **செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல் :-**
    - மொடியூலில் செயற்பாடு 2,3 இல் தரப்பட்ட விடயங்களை வாசித்து விளங்கிக்கொள்ளுங்கள்.
    - இங்கு கூறப்பட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுங்கள்.
    - வாழ்த்து மடலைத் தயாரித்து முன்வைக்க வழிகாட்டுங்கள்.
6. **தரவிருத்தி உள்ளீடுகள் :-**

    வாழ்த்து மடல் தயாரிக்கத் தேவையான பொருட்கள்.
    கடதாசி, கத்தரிக்கோல் , பசை முதலியவை.
7. **செயற்பாட்டின்மூலம் அடைந்துகொள்ளப்படும் திறன்கள் :-**
    - விடாமுயற்சி
    - இணைந்து செயற்படல்
    - அக்கறை, நேர்மை
    - படைப்பாற்றல்
    - நேர்த்தி
8. **வீட்டுவேலை :-**
    - தாம் விரும்பிய வாழ்த்து மடலொன்றை தயாரித்து வரும்படி வழிப்படுத்துங்கள்.
9. **மேலதிக வாசிப்பு :-**
    - வெவ்வேறு வகையான வாழ்த்து மடல்களை பல்வேறு வழிகளில் வாசித்து அறிந்து கொள்ள வழிப்படுத்துங்கள்.

| செயலடைவுத் தரம் | நியதி | மிகநன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| நடைமுறை வாழ்க்கையில் வாழ்த்துமடல் பயன்படுத்தப் படும் நான்கு சந்தர்ப்பங்களை முன்வைப்பார். பண்போடு கலந்துரையாடு வார். | சந்தர்ப்பங்க ளின் எண் ணிக்கை | வாழ்த்து மடல் பயன்படும் நான்கு சந்தர்ப்பங் களைச் சொல்லுவார். | மூன்று பொரு த்தமான சந்தர்ப்பங் களைக் கூறுவார். | இரண்டு பொருத்த மான சந்தர்ப்பங் களைக் கூறுவார். | ஒரு பொருத்த மான சந்த ர்ப்பத்தை கூறுவார். |
| | சந்தர்ப்பங் களின் பொருத்தம் | கூறப்பட்ட சந்தர்ப்பங்கள் வாழ்த் துமடலுக்கு முற்றிலும் பொருத்த மானவை. | பொருத்த மானவை | ஓரளவு பொருந் தும் | பொருத்தம் முறையாக இல்லை. |
| | விளக்கத் திறன் | ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் ஒவ்வொரு வாழ்த்து மடல் பயன்படுத்தப் படுகிறது என்பதைக் கூறுவார். | அனைத்திற் கும் தெளிவான விளக்கம் காணப்படு கின்றது. | சில சந்தர்ப்பங் களுக்கு விளக்கம் உள்ளது. | விளக்கம் குறைவு. |
| | மொழி மற்றும் அமைப்பு | உரையின் அமைப்பு, மொழித் தேர்வு மற்றும் தெளிவுத் தன்மை காணப்படுகின் றது. | தெளி வான, ஒழுங்கான மற்றும் நேர்த்தி யான மொழி காணப்படல். | சராசரி நிலை காணப்படல் | குழப்பமான மற்றும் தவறு காணப்படல். |

1. **செயற்பாடு :-** 2.1.3, 2.1.4, 2.1.5
2. **காலம் :-** 50 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** வாழ்த்து மடலுடன் தொடர்புடைய வினாக்களுக்கு விடையளித்தல்.
4. **செயற்பாடுகளின்மூலம் மாணவர் அடைந்துக்கொள்ள உள்ளவை :-**
    - வாழ்த்து மடலில் உள்ளடங்கி இருக்கும் விடயங்களை அறிந்து கூறுவார்.
    - வாழ்த்து மடலோடு தொடர்பான விடயங்களில் அவதானம் செலுத்துவார்.
    - வாழ்த்து மடலுடன் தொடர்புடைய வினாக்க்கு விடையளிப்பார்.
    - வினாக்களுக்கு சரியான விடைகளைக் எழுதுவார்.
    - வாழ்த்துமடல் தயாரிப்பதன் ஊடாகப் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்யமுடியும் என்பதனை அறிந்துகூறுவார்.

**5. செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல் :-**

- மொடியூலில் செயற்பாடு 4,5 இல் தரப்பட்டுள்ள விடயங்களை வாசித்து விளங்கிக்கொள்ளுங்கள்.
- இங்கு தரப்பட்டுள்ள செயற்பாடு பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- வினாக்களுக்கு விடையளிக்கும் முறையை விளக்கி சரியான விடைகளை எழுத மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் தனித்தனியாக வாழ்த்துமடல் தயாரிக்க அவர்களை வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் தயாரித்த வாழ்த்து மடல்களை வகுப்பறையில் காட்சிப்படுத்த ஏற்பாடு செய்யுங்கள்.
- சுய கணிப்பீட்டை சரியாகச் செய்வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

**6. தரவிருத்தி உள்ளீடுகள் :-**

பல்வேறு வாழ்த்து மடல்கள்.

**7. செயற்பாட்டின் மூலம் அடைந்துகொள்ளப்படும் திறன்கள் :-**

- விமர்சனச் சிந்தனை
- தொடர்பாடல் திறன்
- படைப்பாற்றல்
- விடாமுயற்சி

**8. வீட்டுவேலை :-**

- ஆசிரியர் தின விழாவிற்கான வாழ்த்து மடல் ஒன்றை தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

**9. மேலதிக வாசிப்பு :-**

- இணையத்தில் உள்ள வாழ்த்து மடல்களை வாசித்து அதன் விபரங்களைத் திரட்டுங்கள்.

| செயலடைவுத் தரம் | நியதி | மிகநன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| வாழ்த்துமடலில் உள்ளடங்க வேண்டிய அடிப்படை விடயங்களைப் பயன்படுத்தி, இருபது சொற்கள் கொண்ட வாழ்த்துமடல் ஒன்றைத் தயாரிப்பார். | வாழ்த்து மடலில் அடிப்படை விடயம் | யாருக்காக வாழ்த்துமடல் எழுதப் படுகிறது என்பதைத் தெளிவாக குறிப்பிடுதல். | யாருக்காக வாழ்த்து மடல் எழுதப் படுகிறது என்பது ஓரளவு குறிப்பிடு தல். | யாருக்காக வாழ்த்துமடல் எழுதப் படுகிறது என்பதைத் தெளிவு இல்லை. | பொருத்த மான தன்மை குறைவு. |
| | வாழ்த்துக் கான காரணம் | வாழ்த்துக்களின் நோக்கம் பிறந்த நாள், திருமணம் போன்று நான்கு வகையை குறிப்பிட்டு ள்ளார். | வாழ்த்து க்களின் நோக்கம் மூன்று குறிப்பிடு வார். | வாழ்த்துக்கள ின் நோக்கம் இரண்டு குறிப்பிடுவார். | வாழ்த்துக்கள ின் நோக்கம் ஒன்றை குறிப்பிடு வார் |
| | வாழ்த்து சொற்கள் | காத்திரமான சிறப்பு மிக்க சொற்களைப் பயன்படுத்தி வாழ் த்துக்களைத் தெரிவிக்கி ன்றனர். | விஷேட மான சொற்க ளைப்பய ன்படுத்தி வாழ் த்து க்களைத் தெரிவிக் கின்றனர். | பொதுவான சொற்களை பயன்படுத்தி உள்ளனர். | வாழ்த்து சொற்கள் குறைவாக பயன்படுத்தி யுள்ளனர். |
| | நல்லாசிக் கூறுதல். | எதிர்கால நலனுக்கான ஆசிகள், நல்லதைச் சொல்வது மேலும் வளர, வாழ்க வளமுடன் போன்றவை உள்ளன. | தெளி வான நல்லாசி கள் உள்ளன. | ஒரு ஆசி மட்டும் உள்ளன. | ஆசி கூறும் சொற்கள் இல்லை. |
| | சொற்களின் எண்ணி க்கை | வாழ்த்துமடல் 20 சொற்க ளுக்குள் இருக் கிறது. | வாழ்த்து மடல் சரியாக 16-19 சொற்க ளுக்குள் இருக் கிறது. | வாழ்த்துமடல் 10–15 சொற்களுக் குள் இருக்கிறது. | 10-க்கும் குறைவாகஅ ல்லது 25-க்கும் அதிகமான சொற்கள் இருக்கிறது. |

# கற்றற் சந்தர்ப்பம் - 2 அழைப்பிதழ் தயாரிப்போம்

| கற்றல் பேறுகள் | செயலடைவுத் தரம் | உள்ளடக்கம் | உள்ளடக்க எல்லைகள் |
|---|---|---|---|
| 1.6<br>அழைப்பிதழ் ஒன்றைப் பொருத்த மாகவும் ஆக்கத் திறனுடனும் தயாரிப்பார். | 1.6.1<br>அழைப்பிதழ் ஒன்றைப் பொருத்தமாக வும் ஆக்கத்திறனுடனும் தயாரிப்பார்.<br>1.6.2<br>வழங்கப்பட்ட அழைப்பிதழை அடிப் படையாகக் கொண்டு அதில் காணப் படும் பண்புகளை விளங்கி, எழுதுவார். (நான்கு பண்புகள்)<br>1.6.3<br>நடைமுறை வாழ்க்கையில் அழைப்பி தழ் பயன்படுத்தப்படும் நான்கு சந்தர் ப்பங்களை அறிந்து கூறுவார். (நான்கு சந்தர்ப்பங்கள்)<br>1.6.4<br>அழைப்பிதழின் அடிப்படைப் பண்புகள் அமைய வழுவற்ற எழுத்துப்பிரயோகம், நிறுத்தக்குறி முதலானவற்றை அனுசரித்து அழைப்பிதழ் ஒன்றைத் தயாரிப்பார்.<br>(முப்பத்தைந்து சொற்கள்) | அழைப்பிதழ் தயாரித்தல்.<br><br>கலைவிழா கண்காட்சி | அழைப்பிதழ் என்றால் என்ன என்பதை அறிதல்.<br><br>அழைப்பிதழில் உள்ளடங்க வேண்டியவை.<br>- தலைப்பு<br>- காலம்<br>- இடம்<br>- செய்தி<br>- ஏற்பாட்டுக்குழு<br><br>அழைப்பிதழ் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள். |

**பாடத்தின் நோக்கம் :- (AIMS)**

- அழைப்பிதழ் பற்றி அறிந்து கூறுவார்.
- அழைப்பிதழில் காணப்பட வேண்டிய பண்புகளை இனங்காண்பார்.
- அழைப்பிதழ் பற்றி நாம் அறிந்து கொண்டதற்கேற்ப அழைப்பிதழ் ஒன்றைத் தயாரிக்கும் திறனைப் பெறுவார்.

1. **செயற்பாடு :-** 2.2.1, 2.2.2
2. **காலம் :-** 50 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** அழைப்பிதழில் உள்ளடங்கியுள்ள விடயங்களை அறிதல்.
4. **செயற்பாடுகளின்மூலம் மாணவர் அடைந்துக்கொள்ளவுள்ளவை :-**
   - அழைப்பிதழ் என்றால் என்ன? என அறிந்து கூறவார்.
   - அழைப்பிதழ் ஒன்றில் உள்ளடங்க வேண்டிய விடயங்களை அறிந்துகொள்வார்.
   - அழைப்பிதழில் பல்வேறு வகைகள் உள்ளன என்பதனை இனங்கண்டு கூறுவார்.
   - அழைப்பிதழ் தயாரிப்பதன் ஊடாகப் பெறப்படும் பொருளாதார முக்கியத்து வத்தினை எடுத்துக்கூறுவார்.

5. **செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல் :-**
   - மொடியூலில் தரப்பட்டுள்ள செயற்பாடு 2.1, 2.2இல் உள்ளனவற்றை நன்கு அவதானியுங்கள்.
   - செயற்பாடு 2.1இல் குறிப்பிட்டுள்ளவாறு மாணவர்களைக் குழுக்களாக்கி செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
   - செயற்பாடு 2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலதிகமான தகவல்களை மாணவர்கள் முன்வைப்பதற்கு அவர்களை வழிப்படுத்துங்கள்.
   - இவ்விடயங்களை கவனத்திற்கொண்டு கலந்துரையாடுங்கள்.
6. **தரவிருத்தி உள்ளீடுகள் :-**

   மாதிரி அழைப்பிதழ்கள்
7. **செயற்பாட்டின்மூலம் அடைந்துகொள்ளப்படும் திறன்கள் :-**
   - தொடர்பாடல் திறன்
   - இணைந்து செயற்படல்
   - பொறுப்புக்கூறல்
8. **வீட்டு வேலை :-**
   - மாணவர்களின் வீடுகளில் கிடைக்கப்பெற்றுள்ள அழைப்பிதழ்களை சேகரித்து கொண்டுவர வழிப்படுத்துங்கள்.
9. **மேலதிக வாசிப்பு :-**
   - இணையத்தில் அழைப்பிதழின் வகைகள் அவற்றின் உள்ளடக்கங்கள் பற்றித் தேடியறிய மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

| **செயலடைவுத் தரம்** | **நியதி** | **மிகநன்று** | **நன்று** | **சாதாரணம்** | **முன்னேற்றம் தேவை** |
|---|---|---|---|---|---|
| அழைப்பிதழ் ஒன்றினை அவதானித்து அழைப்பிதழ் என்றால் என்ன என்பதைப் பற்றி சுருக்கமாகக் கூறுவார். | அழைப்பிதழைக் கவனித்தல் | வழங்கப்பட்ட அழைப்பிதழைப் பற்றிய முக்கிய நான்கு அம்சங்களை (நிகழ்வு, தேதி, நேரம், இடம்) கவனித்துள்ளார் | மூன்று அம்சங்களை தெளிவாக கவனித்தார். | இரண்டு அம்சங்களை மட்டுமே கவனித்தார். | ஒரு அம்சத்தை மட்டும் கவனித்தார் |
| | அழைப்பிதழ் என்றால் என்ன? | அழைப்பிதழின் அர்த்தத்தை சுருக்கமாக,தெளிவாக எடுத்துரைத்துள்ளார். | தெளிவான, குறுகிய விளக்கம் கபணப்படல். | ஓரளவு சரியான விளக்கம் காணப்படல் | தவறான/ முதிர்ச்சியற்ற விளக்கம் காணப்படல். |
| | முக்கிய கூறுகளின் அடையாளம் | அழைப்பிதழில் உள்ள முக்கிய கூறுகள் (நிகழ்வு வகை, தேதி, நேரம், இடம்)பற்றிக் குறிப்பிட்டுள்ளார். | அனைத்து முக்கிய கூறுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. | சில கூறுகள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன. | ஓரிரு கூறுகள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| | மொழி தெளிவுத் தன்மை மற்றும் சுருக்கம் | மொழி எளிமை, சுருக்கம், பிழையில்லாத நடை.காணப்படுதல். | மொழி தெளிவும் சுருக்கமும் காணப்படல். | ஓரளவு தெளிவான நடை காணப்படல். | மொழி நடை குழப்பமாக காணப்படல். |

1. **செயற்பாடு :-** 2.2.3, 2.2.4
2. **காலம் :-** 50 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** அழைப்பிதழின் உள்ளடக்கத்தை அறிந்துகொள்ளல்.
4. **செயற்பாடுகளின்மூலம் மாணவர் அடைந்துக்கொள்ள உள்ளவை :-**
    - அழைப்பிதழின் அமைப்புப் பற்றி அறிந்து கூறுவார்.
    - அழைப்பிதழ் ஒன்றில் உள்ளடங்க வேண்டியவற்றை இனங்காண்பார்.
    - அழைப்பிதழை அடிப்படையாகக் கொண்டு தரப்படும் குறிப்பட்டையை பூரணப்படுத்தவார்.
    - தரப்படும் தகவல்களைக் கொண்டு அழைப்பிதழ் ஒன்றை வடிவமைப்புச் செய்வார்.
5. **செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல் :-**
    - மொடியூலில் செயற்பாடு 2.3, 2.4 ஆகியவற்றை நன்கு அவதானியுங்கள்.
    - மொடியூலில் கூறப்பட்டுள்ள விடயங்களுக்கு ஏற்ப செயற்பாட்டைச் செய்வதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
    - அழைப்பிதழ் ஒன்றை வடிவமைப்புச் செய்வதற்கான ஆலோசனைகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
    - விசாரணை அடிப்படையிலான அறிவியல் அணுகுமுறையினைக் கைளுங்கள்.(SMI)
6. **தரவிருத்தி உள்ளீடு :-**
    - மாதிரி அழைப்பிதழ்கள்
7. **செயற்பாட்டின்மூலம் அடைந்து கொள்ளப்படும் திறன்கள் :-**
    - விமர்சனச் சிந்தனை
    - தொடர்பாடல் திறன்
    - படைப்பாற்றல்
    - இணைந்து செயற்படல்
8. **வீட்டுவேலை :-**
    - அழைப்பிதழ் சிலவற்றைத் தேடிப்பெற்று அதில் உள்ளடங்கியுள்ளவற்றை பட்டியற்படுத்திக் கொண்டு வர மாணவர்களை வழிப்படுத்துங்கள்
9. **மேலதிக வாசிப்பு :-**
    - பல்வேறு அழைப்பிதழ்களைத் தேடிப்பெற்று அதிலுள்ள விடயங்களை வாசிக்க வழிப்படுத்துங்கள்.

| செயலடைவுத் தரம் | நியதி | மிகநன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| அழைப்பிதழை அடிப்படையாகக் கொண்டு அதில் காணப்படும் நான்கு பண்புகளை விளக்கிக் கூறுவார். | அழைப் பிதழின் ஆழமான புரிதல் | அழைப் பிதழின் நோக்கம், அமைப்பு மற்றும் முக்கிய கூறுகளை தெளிவாக விளக்குகிறது. | அழைப் பிதழின் நோக்கம், அமைப்பினை விளக்குகிறது | அழைப் பிதழின் நோக்கம், அமைப்பு ஓரளவு விளக்குகிற து. | அழைப் பிதழைப் பற்றி தவறான விளக்கம் அல்லது மிகக் குறைந்த விளக்கம் அளிக்கின்றது. |
| | நான்கு பண்பு களின் அடை யாளம் | அழைப் பிதழில் காணப்படும் 4 தனித்த பண்புகளை சரியாக அடையாளம் காண்கிறார். | 3 பண்பு களை சரியாக அடையாளம் காண்கின்றார் | 2 பண்புகள் மட்டுமே சரியாகக் அடையாள ம் காண்கின்ற ார். | 1 அல்லது அதற்கும் குறைவான பண்புகள் மட்டுமே. அடையாளம் காண்கின்றார். |
| | ஒவ் வொரு பண்பின் விளக்கம் | ஒவ்வொரு பண்பும் தெளிவாக, உதாரணங்க ளுடன் விளக்கப் பட்டுள்ளது. | பெரும்பாலா ன பண்புகள் நல்ல விளக்கத்துட ன் உள்ளன. | சில பண்புகள் மட்டும் சரியாக விளக்கப் பட்டுள்ளன. | விளக்கம் தெளிவாக இல்லை அல்லது தவறாக உள்ளது. |
| | மொழித் திறமை மற்றும் அமைப்பு | தமிழ் மொழியின் இலக்கணப் பிழையின்றி, ஒழுங்கான கட்டமைப் புடன் பதிலளிக்கிறது | சிறிய பிழைகள் இருந்தாலும், வாசிக்கத் தெளிவாக உள்ளது. | பிழைகள் சற்றே அதிகம், வாசிக்க சிரமம் ஏற்படு கிறது. | மொழி குழப்பம் ஏற்படுத்தும் வகையில் உள்ளது. |

1. **செயற்பாடு :-** 2.2.5, 2.2.6, 2.2.7, 2.2.8
2. **காலம் :-** 50 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** அழைப்பிதழ் தயாரித்தல்,
4. **செயற்பாடுகளின்மூலம் மாணவர் அடைந்துகொள்ளவுள்ளவை :-**
   - அழைப்பிதழ் ஒன்றைத் தயாரிக்கத் தேவையான பொருட்கள் எவை என அறிந்து கூறுவார்.
   - பல்வேறு நிகழ்வுகளுக்கு அழைப்பிதழ் வழங்கப்படும் சந்தர்ப்பங்களை இனங்கண்டு முன்வைப்பார்.
   - சுயமாக அழைப்பிதழ் ஒன்றைத் தயாரித்துக்காட்டுவார்.
   - தனது படைப்பாற்றல் திறனை வெளிப்படுத்தவார்.

5. **செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல் :-**
   - மொடியூலில் தரப்பட்டுள்ள செயற்பாடுகளை சரியாக வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்.
   - குழுச்செயற்பாட்டை செய்வதற்கு மாணவர்களுக்கு அதற்கேற்ற ஆலோசனைகளை வழங்குங்கள்.
   - மாதிரி அழைப்பிதழைக் கொண்டு அழைப்பிதழ் ஒன்றைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.
   - மொடியூலில் கூறப்பட்ட படிமுறைக்கேற்ப செயற்பாடுகளைச் செய்வதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
   - செயலடைவு உறுதிப்பாட்டுப் படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு மாணவரை உரிய முறையில் வழிப்படுத்துங்கள்.
6. **தரவிருத்தி உள்ளீடுகள் :-**
   மாதிரி அழைப்பிதழ்கள்
7. **செயற்பாட்டின்மூலம் அடைந்து கொள்ளப்படும் திறன்கள் :-**
   - விமர்சனச் சிந்தனை
   - தொடர்பாடல் திறன்
   - படைப்பாற்றல்
   - விடாமுயற்சி
   - இணைந்து செயற்படல்
8. **வீட்டுவேலை :-**
   - விழா ஒன்றினைக் குறிப்பிட்டு அதற்குரிய அழைப்பிதழைத் தயாரித்து வருமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
9. **மேலதிக வாசிப்பு :-**
   - பல்வேறு ஊடகங்கள் வாயிலாக அழைப்பிதழின் மாதிரிகைகளைப் பார்வையிட்டு அவற்றில் உள்ளடக்கங்கள் எவ்வாறு அமைந்துள்ளன என குறிப்பெடுத்துக் கொண்டு வருமாறு வழிப்படுத்துங்கள்.

| செயலடைவுத் தரம் | நியதி | மிகநன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| நடைமுறை வாழ்க்கையில் அழைப்பிதழ் பயன்படுத்தப் படும் நான்கு சந்தர்ப்பங்கள், உள்ளடக்கப் பட்டிருக்கும் அடிப்படை அம்சங்களைக் கொண்டு அழைப்பிதழ் ஒன்றைத் தயாரிப்பார். | நான்கு சந்தர்ப்பங்களின் அடையாளம் | வாழ்வில் ஏற்படும் 4 முக்கியமான அழைப்பிதழ் பயன்பாட்டு நிகழ்வுகளை சரியாகவும் பொருத்தமாகவும் தேர்ந்தெடுத்துள்ளார். | 3சந்தர்ப்பங்களைத் தெளிவாகத் தேர்ந்தெடுத்துள்ளார். | 2சந்தர்ப்பங்களை மட்டுமே குறிப்பிடுகிறார். | 1 அல்லது தவறான சந்தர்ப்பங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| | அழைப்பிதழின் அடிப்படை அம்சங்கள் | நாள், நேரம், இடம், நிகழ்வின் பெயர்,அழைப்பவர் பெயர் போன்ற அம்சங்கள் முழுமையாக உள்ளடக்கப்பட்டுள்ளன. | பெரும்பாலான 4 அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. | சில 2–3 அம்சங்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன. | மிகக் குறைவான 1 அல்லது அதற்கும் குறைவான) அம்சங்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன |
| | அழைப்பிதழின் வடிவமைப்பு மற்றும் அமைப்பு | அழைப்பிதழ் முறையாக, அழகான வடிவில், வாசிக்க எளிதாக அமைக்கப்பட்டுள்ளது. | சிறிய அமைப்புப் பிழைகள் இருந்தாலும், வாசிக்கத் தெளிவாக உள்ளது. | அமைப்பில் குழப்பம் உள்ளது வாசிக்க சிரமமாக இருக்கிறது | அழைப்பிதழ் முற்றிலும் அமைப் பற்றது அல்லது வாசிக்க முடியாத நிலை உள்ளது. |
| | மொழி மற்றும் உச்சரிப்பு | இலக்கணத் தவறுகள் இல்லாமல், தெளிவான தமிழ் பயன்படுத்தப்பட்டுள்ளது. | சிறிய பிழைகள் இருந்தாலும், கருத்து தெளிவாக உள்ளது. | மொழிப்பிழைகள் பல உள்ளன, பொருள் ஆழமாகத் தெரியவில்லை. | மிகவும் குறைந்த மொழித்திறனோடு, பிழைகள் நிறைந்த பதில். |

# கற்றற் சந்தர்ப்பம் - 3 சுவரொட்டி தயாரிப்போம்

| கற்றல் பேறுகள் | செயலடைவுத் தரம் | உள்ளடக்கம் | உள்ளடக்க எல்லைகள் |
|---|---|---|---|
| 1.7<br>சுவரொட்டி ஒன்றை ஆக்கத் திறனுடன் தயாரிப்பார். | 1.7.1<br>சுவரொட்டி ஒன்றினை அவதானித்து அது பற்றிச் சுருக்கமாக விளக்கிக் கூறுவார்<br><br>1.7.2<br>வழங்கப்பட்ட சுவரொட்டியை அடிப் படையாக் கொண்டு அதில் காணப் படும் பண்புகளை இனங்கண்டு கூறுவார். (நான்கு பண்புகளை)<br>1.7.3<br>நடைமுறை வாழ்க்கையில் சுவரொட்டி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை அறிந்து கூறுவார்.<br>(நான்கு சந்தர்ப்பங்கள்)<br>1.7.4<br>சுவரொட்டியின் அடிப்படைப் பண்புக ளைக் கவனத்திற் கொண்டு வழுவற்ற எழுத்துப்பிரயோகம், நிறுத்தக்குறி முதலானவற்றை அனுசரித்து சுவரொட்டி ஒன்றைத் தயாரிப்பார்.<br>(முப்பத்தைந்து சொற்கள்) | சுவரொட்டி<br><br>கண்காட்சி | சுவரொட்டி ஒன்றின் தன்மைகள்.<br>சுவரொட்டியில் உள்ளடங்க வேண்டியவை.<br>- கவர்ச்சியான தலைப்பு<br>- செய்தி<br>- நிறம்<br>- வடிவமைப்பு<br>- இடம்<br>- காலம்,<br>- அழைப்பு<br><br>சுவரொட்டி பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள்.<br><br>- விளம்பரம்<br>- பொது அறிவிப்பு |

**பாடத்தின் நோக்கம் :- (AIMS)**

- சுவரொட்டி பற்றி அறிந்து கூறுவார்.
- சுவரொட்டியில் காணப்பட வேண்டிய பண்புகளை இனங்கண்டுகொள்வார்.
- சுவரொட்டி ஒன்றினைத் தயாரித்துக்காட்டுவார்.
- வேலை உலகின் பொருத்தப்பாட்டினை அறிந்துகூறுவார்.

1. **செயற்பாடு :-** 2.3.1, 2.3.2
2. **காலம் :-** 50 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** சுவரொட்டியொன்றின் உள்ளடக்கம் பற்றி அறிந்துகொள்ளல்.
4. **செயற்பாடுகளின்மூலம் மாணவர் அடைந்துகொள்ள இருப்பவை :-**
    - சுவரொட்டி பற்றி அறிந்து கூறுவார்.
    - சுவரொட்டியில் உள்ளடங்கும் விடயங்களை அறிந்து முன்வைப்பார்.
    - பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்துப்படுகின்ற சுவரொட்டிகளை இனங்கண்டு,தயாரிப்பில் ஈடுபடுவார்.
5. **செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல் :-**
    - மொடியூலில் தரப்பட்டுள்ள சுவரொட்டியை அவதானிக்கச் செய்யுங்கள்.
    - அதில் மாணவர்கள் அவதானித்த விடயங்களை முன்வைக்க சந்தர்ப்பமளியுங்கள்.

- மொடியூலில் தரப்பட்டுள்ள சுவரொட்டியை அவதானிக்கச் செய்யுங்கள்.
- வகுப்பில் ஒருவரைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.
- அவ்விடயம் தொடர்பாகத் தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுத மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**6. தரவிருத்தி உள்ளீடுகள்**

திறன் பலகை, மாதிரி சுவரொட்டிகள்

**7. செயற்பாட்டின் மூலம் அடைந்து கொள்ளப்படும் திறன்கள் :-**

- விமர்சன சிந்தனை
- தொடர்பாடல் திறன்
- படைப்பாற்றல்
- இணைந்து செயற்படல்

**8. வீட்டுவேலை :-**

- மாதிரி சுவரொட்டிக்கேற்ப மற்றுமொரு சுவரொட்டியைத் தயாரித்து வர வழிப்படுத்துங்கள்.

**9. மேலதிக வாசிப்பு :-**

- பல்வேறு வழிகளில் சுவரொட்டிகளைத் தேடி வாசித்து தகவல்களைத் திரட்டிக் கொண்டு வர வழிப்படுத்துங்கள்

| **செயலடைவுத் தரம்** | **நியதி** | **மிகநன்று** | **நன்று** | **சாதாரணம்** | **முன்னேற்றம் தேவை** |
|---|---|---|---|---|---|
| சுவரொட்டி ஒன்றினை அவதானித்து சுவரொட்டி என்றால் என்ன என்பதைப் பற்றி சுருக்கமாக விளக்குவார். | விளக்கமும் தெளிவு | சுவரொட்டி என்றால் என்ன என்பதை மிகத் தெளிவாக, சுருக்கமாக மற்றும் துல்லியமாக விளக்கியுள்ளார். | சுவரொட்டி என்றால் என்ன என்பதை தெளிவாக விளக்கியுள்ளார். | விளக்கம் சற்று குழப்பமாகவோ அல்லது முழுமையற்றதாகவோ உள்ளது. | விளக்கம் தெளிவில்லை அல்லது தவறாக உள்ளது. |
| | முக்கிய அம்சங்கள் | சுவரொட்டியின் அனைத்து முக்கிய அம்சங்களையும் (படம், வாசகம், நோக்கம்) சரியாகக் குறிப்பிட்டுள்ளார். | சுவரொட்டியின் பெரும்பாலான முக்கிய அம்சங்களை சரியாகக் குறிப்பிட்டுள்ளார். | சில முக்கிய அம்சங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளார். | முக்கிய அம்சங்கள் எதையும் குறிப்பிடவில்லை. |
| | மொழி நடை | பயன்படுத்திய மொழி மிகவும் துல்லியமானது, இலக்கணப் பிழையின்றி, வாசிக்க எளிதாக உள்ளது. | பயன்படுத்திய மொழி தெளிவாக உள்ளது, ஒரு சில இலக்கணப் பிழைகள் உள்ளன. | மொழிநடை சற்று கடினமாக உள்ளது, அதிக இலக்கணப் பிழைகள் உள்ளன. | மொழி நடை குழப்பமாக உள்ளது, புரிந்துகொள்வது கடினம். |
| | சுருக்கம் / சுருக்க உத்தி | விளக்கம் மிகச் சுருக்கமாகவும், தேவையான தகவல்களை மட்டும் | விளக்கம் சுருக்கமாக உள்ளது, ஆனால் சில தேவையற்ற | விளக்கம் மிகவும் நீளமாகவோ அல்லது | விளக்கம் சுருக்கமாகவும் இல்லை, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | உள்ளடக்கி யதாகவும் உள்ளது. | தகவல்களும் உள்ளன. | மிகக் குறைவா கவோ உள்ளது. | தகவலும் போதுமான தல்ல. |
| | நோக்கத் தைப் புரிந்து கொள்ளல் | சுவரொட்டியின் பிரதான நோக்கம் மற்றும் அதன் தாக்கம் என்னவென் பதைப் புரிந்துகொண்டு விளக்கியு ள்ளார். | சுவரொட்டியின் நோக்கம் பற்றி ஓரளவுக்குப் புரிந்துகொண்டு விளக்கியுள்ளார். | நோக்கம் பற்றிய புரிதல் குறைவாக உள்ளது. | சுவரொட் டியின் நோக்கத் தைப் பற்றிப் விளங்க வில்லை. அல்லது தவறாகப் புரிந்துகொண் டுள்ளார். |

1. **செயற்பாடு :-** 2.3.3, 2.3.4
2. **காலம் :-** 100 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** சுவரொட்டி தயாரித்தல்
4. **செயற்பாட்டின் மூலம் மாணவர் அடைந்துகொள்ளவுள்ளவை**
    - சுவரொட்டி ஒன்று எவ்வாறு அமையவேண்டும் என்பதை அறிந்து கூறுவார்.
    - சுவரொட்டி தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களை இனங்காண்பார்.
    - சுவரொட்டியின் பண்புகளுக்கேற்றவாறு சுவரொட்டியைத் தயாரிக்கும் திறனைப் பெறுவார்.
    - சுவரொட்டி சமூக விழிப்புணர்வுக்கான ஊடங்களில் ஒன்று என்பதனை உணர்ந்து செயற்படுவார்.
5. **செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல் :-**
    - மொடியூலில் தரப்பட்டுள்ள செயற்பாடுகளை சரியாக விளங்கிக் கொள்ளுங்கள்.
    - சுவரொட்டியின் தன்மைகள், உள்ளடக்கங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
    - தரப்பட்டுள்ள செயற்பாட்டினை முன்கொண்டு செல்வதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்
    - சுவரொட்டி ஒன்றைத் தயாரிக்கும் முறை பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடி முன்வையுங்கள்.
    - சுவரொட்டியைத் தயாரிக்க வழிகாட்டுங்கள்.
6. **தரவிருத்தி உள்ளீடுகள் :-**

    மாதிரி சுவரொட்டி

    சுவரொட்டி தயாரிக்கத் தேவையான பொருட்கள்
7. **செயற்பாட்டின் மூலம் அடைந்து கொள்ளப்படும் திறன்கள் :**
    - விமர்சனச் சிந்தனை
    - தொடர்பாடல் திறன்
    - படைப்பாற்றல்
    - விடாமுயற்சி

- இணைந்து செயற்படல்
- நேர்த்தி

**8. வீட்டுவேலை :-**

- பொருத்தமான தலைப்பிற்கேற்ப சுவரொட்டியொன்றைத் தயாரிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

**9. மேலதிக வாசிப்பு :-**

பல்வேறு ஊடகங்களில் சுவரொட்டி பற்றித் தேடியறிந்து தகவல்களைப் பெறுவதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

| **செயலடைவுத் தரம்** | **நியதி** | **மிகநன்று** | **நன்று** | **சாதாரணம்** | **முன்னேற்றம் தேவை** |
|---|---|---|---|---|---|
| சுவரொட்டி ஒன்றை ஆக்கத்திறனுடன் தயாரிப்பார். கலந்துரையாடுவார். | கருத்து தெளிவு | சுவரொட்டியின் தலைப்பு மற்றும் செய்தி மிக தெளிவாகவும் தாக்கமுமாக உள்ளது. | செய்தி தெளிவாக உள்ளது. | கருத்து கூறப்பட்டது. ஆனால் தெளிவில். | கருத்து குழப்பமாக உள்ளது |
| | மொழித் திறனும் அழுத்தமும் | உரிய சொல் தேர்வு, வாசகனை கவரும் நடையில் எழுதப்பட்டுள்ளது. | சரியான சொற்கள், சிறந்த நடை | சில இடங்களில் எளிமையாக உள்ளது, தாக்கம் குறைவு | பிழைகள் அதிகம் வாசிப்புக்கு இடையூறு |
| | வடிவமைப்பு/அலங்காரம். | எழுத்துரு, வண்ணம், அமைப்பு மிக நேர்த்தி | கவர்ந்திழுக்கு வடிவமைப்பு நன்றாக உள்ளது | அடிப்படை அலங்காரம் உள்ளதாய் தோன்றுகிறது. | வடிவமைப்பில் கவனம் இல்லை |
| | தரவுத் தேர்வு / பொருத்தம் | தேவையான தகவல்கள் மட்டுமே உள்ளன. | கவனத்தை ஈர்க்கும் வகையில்தகவல்கள் தகுந்தவையாக உள்ளன. | சில தகவல்கள் தேவையற்றவையாக இருக்கலாம். | முக்கியமான தகவல்கள் தவறவிட்டுள்ளன. |

# கற்றற் சந்தர்ப்பம் - 04 ஒத்த கருத்துச் சொற்கள்

| கற்றல் பேறுகள் | செயலடைவுத் தரம் | உள்ளடக்கம் | உள்ளடக்க எல்லைகள் |
|---|---|---|---|
| 2.1<br>சொற் களஞ்சி யத்தை அறிந்து தேவைக் கேற்பப் பயன்படுத் துவார். | 2.1.1<br>தரப்படும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொல் ஒவ்வொன்றை எழுதுவார். (முப்பது சொற்கள்)<br>2.1.2<br>தரப்படும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை அறிந்து, இடைவெளி நிரப்புவார். (பதினைந்து சொற்கள்)<br>2.1.3<br>தரப்படும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை அறிந்து, அவற்றைப் பயன் படுத்தி, வாக்கிய இயைபு, வழுவற்ற சொற்பிரயோகம், நிறுத்தக் குறிப்பயன்பாடு முதலியவற்றைக் கவனத்தில் கொண்டு கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுவார். (பதினைந்து வாக்கியங்கள்) | ஒத்த கருத்துச் சொற்கள். | தரப்படும் சொற்களுக்கான ஒத்தக் கருத்துச் சொற்களை எழுதுதல்.<br><br>பத்து ஒத்தக் கருத்துச் சொற்களை வைத்து வாக்கியம் அமைத்தல். |

**பாடத்தின் நோக்கம் (AIMS)**

- ஒத்தகருத்துச் சொற்களை அறிந்து கூறுவார்.
- தரப்படும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களைத் தேடி அறியும் திறன் பெறுவார்.
- தரப்படும் சொற்களுக்கான ஒத்தகருத்துள்ள சொற்களை வைத்து கருத்துள்ள வாக்கியம் அமைப்பார்.
- ஊடக எழுத்தறிவுக்கு ஒத்தகருத்துள்ள சொற்களின் பங்களிப்பு அவசியம் என்பதை எடுத்துக்காட்டுவார்.

1. **செயற்பாடு :-** 2.4.1, 2.4.2, 2.4.3, 2.4.4, 2.4.5
2. **காலம் :-** 50 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** ஒத்தகருத்துச் சொற்களைத் தேடியறிதல்.
4. **செயற்பாடுகளின்மூலம் மாணவர் அடைந்துகொள்ள இருப்பவை :-**
    - ஒத்தகருத்துச் சொற்களை அறிந்து வெளிப்படுத்துவார்.
    - தரப்படும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை அகராதியின் உதவியுடன் தேடிப் பெற்றுக்கொள்வார்.
    - தரப்படும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை வைத்து கருத்துள்ள வாக்கியம் அமைப்பார்.
5. **செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல்** :-
    - மொடியூலில் தரப்பட்டுள்ள செயற்பாடு 2.4.1, 2.4.2, 2.4.3 ஆகியவற்றை அவதானியுங்கள்.
    - தரப்பட்டுள்ள பாடலை வாசிக்கச் செய்யுங்கள்.
    - வாசித்த பாடலை மெட்டமைத்துப் பாடுவதற்கு மாணவர்களை குழுக்களாக்கி வழிப்படுத்துங்கள்.

- பாடலுடன் தொடர்புடைய சொற்களையும் அதனுடன் தொடர்புடைய ஒத்தகருத்துச் சொற்கள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.
- செயற்பாடு 4.2 இல் உள்ள செயற்பாட்டில் மாணவர்கள் தனித்தனியாக ஈடுபட அவர்களை வழிப்படுத்துங்கள்.

**6. தரவிருத்தி உள்ளீடுகள் :-**

திறன் பலகை, அகராதி, பக்கப்புரட்டி

**7. செயற்பாட்டின்மூலம் அடைந்துக்கொள்ளப்படும் திறன்கள் :-**

- தொடர்பாடல் திறன்
- படைப்பாற்றல்
- விடாமுயற்சி
- இணைந்து செயற்படல்

**8. வீட்டுவேலை :-**

- மொடியூலில் இடம்பெறாத மேலும் 10 சொற்களை வழங்கி அவற்றுக்கான ஒத்தகருத்துச் சொற்களை எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.

**9. மேலதிக வாசிப்பு :-**

- ஒத்தகருத்துச் சொற்களை அறிந்துகொள்ள வழிகாட்டுங்கள்.

| செயலடைவுத் தரம் | நியதி | மிகநன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| தரப்படும் ஒத்தக்கருத்துச் சொற்களை அறிந்து இடைவெளி நிரப்புவார்.<br><br>அவற்றைப் பயன்படுத்தி கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுவார். (15 வாக்கியங்கள்) | ஒத்தக் கருத்துச் சொற்களின் சரியான தேர்வு | இடைவெளிகளுக்குப் பொருத்தமான 5-4 சொற்கள் சரியாகப்பயன்படுத்தப்பட்டுள்ளன. | இடை வெளிகள் வரை3-2 சரியாக நிரப்பப்பட்டுள்ளன. | 1 இடைவெளிகள் வரை சரியாக உள்ளன. | எதற்கும் சரியாக இடைவெளி நிரப்பப்படவில்லை |
| | வாக்கியத்தின் தரமும் சராசரித் தெளிவும் | அனைத்து வாக்கியங்களும் தெளிவாகவும் கருத்துள்ளவையாகவும் அமைந்துள்ளன. | பெரும் பாலான வாக்கியங்கள் கருத்துள்ளவையாக உள்ளன. | சில வாக்கியங்கள் மட்டுமே பொருள் தருகின்றன. சில இடங்களில் குழப்பம் உள்ளது. | அதிகமான வாக்கியங்கள் அர்த்தமற்றவையாகவோ, தவறான அமைப்பிலோ உள்ளன. |
| | சொற்களைப் பயன்படுத்தும் சுதந்திரமும் படைப் பாற்றலும் | ஒத்தக்கருத்துச் சொற்கள் பயனுள்ள மற்றும் இயற்கையான முறையில் வாக்கியங்களில் கையளிக்கப் பட்டுள்ளன. | பல வாக்கியங்களில் சொற்கள் இயற்கையாக உள்ளன. சில வாக்கியங்கள் கட்டாயப் போக்கு காட்டுகின்றன. | சில வாக்கியங்களில் கட்டுப்பட்ட மற்றும் இயற்கையற்ற உபயோகமாக தெரிகிறது. | வாக்கியங்களில் படைப் பாற்றல் இல்லை. மெஷின் போன்று தோன்றும் அல்லது மீளப்பயன்பாடு உள்ளது. |
| | இலக் கணப் பிழைகள் மற்றும் எழுத்து நடை | இலக்கணப்பிழைகள் இல்லாமல், தூய்மை மொழியுடன் வாக்கியங்கள் எழுதப்பட்டுள்ளன. | சிறிய பிழைகள் இருந்தாலும் வாசிக்கத் தெளிவாக உள்ளது. | பிழைகள் சற்று அதிகம் வாசிப்பதில் தடங்கல் உண்டு. | இலக்கணத் தவறுகள் அதிகம் வாசிக்க முடியாத அளவிற்கு குழப்பம் ஏற்படுகிறது. |

# கற்றற் சந்தர்ப்பம் - 5 கலைச்சொற்கள்

| **கற்றல் பேறுகள்** | **செயலடைவுத் தரம்** | **உள்ளடக்கம்** | **உள்ளடக்க எல்லைகள்** |
|---|---|---|---|
| 6.1<br>விதந்துரைக் கப்பட்ட ஏனைய பாடங்களுடன் தொடர்புடைய கல்விச்செயற் பாடுகளின் போது பொருத்தமான மொழியைப் பிரயோகிப்பார் | 6.1.1<br>ஏனைய பாடங்களுக்குரிய பகுதியை வாசித்து அப்பாடங்களுக்கே உரியதான கலைச் சொற்கள் எட்டினை இனங்கண்டு கூறுவார். (எட்டுச் சொற்கள்)<br>6.1.2<br>ஏனைய பாடங்களில் பயன்படுத்தும் கலைச்சொற்கள் எட்டினது கருத்துகளை இனங்கண்டு கூறுவார். (எட்டுச் சொற்கள்)<br>6.1.3<br>ஏனைய பாடங்களில் பயன்படுத்தும் கலைச்சொற்களைப் பயன்படுத்தி கருத்துள்ள வாக்கியங்கள் எழுதுவார். (ஐந்து வாக்கியங்கள்) | கலைச்சொற் கள்<br><br>வெவ்வேறு உரைப்பகுதி | கலைச்சொற் களின் பொருள்<br><br>கலைச்சொற் களின் பிரயோகம். |

**பாடத்தின் நோக்கம் (AIMS)**

- கலைச்சொல் என்றால் என்ன என அறிந்து கூறுவார்.
- கலைச்சொற்களின் பயன்பாடு பற்றிக் கூறுவார்
- கலைச்சொல் பாவனையால் பெறும் பயன்கள் பற்றிக் கூறும் திறன் பெறுவார்.
- தொடர்பாடலின்போது இவற்றைப் பயன்படுத்தும் திறனைப் பெற்றுக் கொள்வார்.
- ஊடக எழுத்தறிவு கொண்டவராகச் செயற்படுவார்.

1. **செயற்பாடு :-** 2.5.1, 2.5.2
2. **காலம் :-** 100 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** கலைச்சொற்களை இனங்கண்டு விளங்கிக்கொள்ளல்.
4. **செயற்பாடுகளின்மூலம் மாணவர் அடைந்துகொள்ளவுள்ளவை :-**
   - கலைச்சொற்களை அறிந்து கூறுவார்.
   - கலைச்சொற்களுக்கான பொருளை அறியும் திறனைப் பெறுவார்.
   - கலைச்சொற்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை அறிந்து அதற்கேற்ப துலங்குவார்.
5. **செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல் :-**
   - மொடியூலில் தரப்பட்டுள்ள 5.1, 5.2 ஆகிய செயற்பாடுகளை அவதானியுங்கள்.
   - மாணவர்களைக் குழுக்களாக்கி அவற்றில் தரப்பட்டுள்ள பந்தியொன்றைக் கொடுத்து செயற்பாட்டில் ஈடுபடச் செய்யுங்கள்.

- குழுச்செயற்பாட்டின் இறுதியில் அவற்றை குழுவாக வகுப்பறையில் முன்வைக்க சந்தர்ப்பமளியுங்கள்.
- மீண்டும் மாணவர்களை குழுக்களாக்கி 5.2 செயற்பாட்டினை முன்கொண்டு செல்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- அதில் காட்டப்பட்டுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்தியப்பின் அதனை வகுப்பறையில் முன்வைக்க வாய்ப்பளியுங்கள்.
- முன்வைப்பு தொடர்பாக கலந்துரையாடுங்கள்.
- விசாரணை அடிப்படையிலான அறிவியல் அணுகுமுறையினைக் கையாளுங்கள்.(SMI)

**6. தரவிருத்தி உள்ளீடுகள் :-**

திறன் பலகை

**7. செயற்பாட்டின்மூலம் அடைந்துகொள்ளப்படும் திறன்கள் :-**

- விமர்சனச் சிந்தனை
- தொடர்பாடல் திறன்
- விடாமுயற்சி
- இணைந்து செயற்படல்
- பொறுப்புக்கூறல்

**8. வீட்டுவேலை :-**

- இங்கு கற்றவற்றிற்கு மேலதிகமாக 5 தொடக்கம் 10 கலைச்சொற்களைத் எழுதிக் கொண்டு வர வழிப்படுத்துங்கள்.

**9. மேலதிக வாசிப்பு :-**

- இணைய நூலகம் , நூலகம் முதலியவற்றைப் பயன்படுத்தி கலைச்சொற்களைக் கண்டறிய வழிப்படுத்துங்கள்.

| செயலடைவுத் தரம் | நியதி | மிகநன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| ஏனைய பாடங்களுக்குரிய பகுதியை வாசித்து அப்பாடங்களுக்கே உரியதான கலைச் சொற்களை இனங்கண்டு கூறுவார். (8சொற்கள்) | கலைச் சொற்களின் சரியான அடையாளம் | 8 கலைச்சொற்கள் சரியாகவும் தொடர்புடைய பாடங்களுக்கு உறுதியாகவும் இணைக்கப் பட்டுள்ளன. | 6 – 7 கலைச் சொற்கள் சரியாக இணைக் கப்பட்டுள் ளன. | 4 – 5 கலைச் சொற்கள் மட்டுமே சரியாக உள்ளன. | 3 அல்லது அதற்கும் குறைவான சொற்கள் மட்டுமே சரியாக உள்ளன. |
| | பாடத் துடன் பொருத் தம் மற்றும் விளக்கம் | ஒவ்வொரு கலைச் சொலுக்கும் தொடர்புடைய பாடம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. | பெரும்பாலான சொற்களுக்கு சரியான பாடம் இணைக் கப்பட்டுள் ளது. | சில சொற்களுக்கு மட்டும் சரியான பாடம் குறிப்பிடப் பட்டுள்ளது | பாடம் மற்றும் கலைச் சொல்லின் பொருத்தம் தெளி வில்லை அல்லது தவறாக இணைக்கப் பட்டுள்ளது. |
| | சொற்களின் விளக்கம் மற்றும் பயன்பாடு | ஒவ்வொரு கலைச்சொலும் பொருளுடன் விளக்கப்பட்டு, பாடத்தில் அது எப்படி பயன்படுகிறது என்பதும் கூறப்பட்டுள்ளது. | பெரும்பாலான சொற்கள் பொருளு டன் விளக்கப் பட்டுள்ளன. | சில சொற்களுக்கு மட்டுமே விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. | சொற்களுக்கு விளக்கம் இல்லாது பட்டியலாக மட்டுமே வழங்கப் பட்டுள்ளது. |
| | மொழி மற்றும் காட்சிப்ப டுத்தும் முறைகள் | தெளிவான மொழி, ஒழுங்கான வடிவமைப்பு, எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய தொகுப்பு. | சிறிய பிழைகள் இருந் தாலும் வாசிப் பதில் தெளிவும் ஒழுங்கும் உள்ளது. | மொழியில் குழப்பம் சற்று இருக் கலாம் பார்வையா ளருக்கு விளக்கம் தேவைப்ப டும்நிலை. | குழப்பமான வடிவமைப்பு, தவறான இலக்கணம், வாசிப்பதில் சிரமம் ஏற்படுகிறது. |

1. **செயற்பாடு :-** 2.5.3
2. **காலம் :-** 100 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** கலைச் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைத்தல்.
4. **செயற்பாட்டின்மூலம் மாணவர் அடைந்துகொள்ளவுள்ளவை :-**
    - கலைச் சொற்களை இனங்கண்டு கூறவார்.
    - கலைச்சொற்களுக்கான பொருளை அறிந்து கூறும் திறனைப் பெறுவார்.
    - கலைச்சொற்களைக் கொண்டு கருத்துள்ள வாக்கியங்களை அமைப்பார்.
5. **செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல் :-**
    - மொடியூலில் செயற்பபடு 5.3இல் கூறப்பட்டவற்றை அவதானியுங்கள்.
    - கலைச்சொற்களை இனங்காண மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

- கலைச்சொற்களுக்கான விளக்கத்தை அறியும்முறை பற்றிக் கலந்துரை யாடுங்கள்.
- கலைச்சொற்களைக் கொண்டு கருத்துள்ள வாக்கியங்களை அமைக்க மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

6. **தரவிருத்தி உள்ளீடு :-**

திறன் பலகை, கலைச்சொல் அகராதி

7. **செயற்பாட்டின் மூலம் அடைந்துகொள்ளப்படும் திறன்கள் :-**
   - விமர்சன சிந்தனை
   - தொடர்பாடல் திறன்
   - படைப்பாற்றல்
   - விடாமுயற்சி
   - இணைந்து செயற்படல்

8. **வீட்டுவேலை :-**
   - மேலதிக வாசிப்பின் ஊடாக கண்டறியப்படும் சொற்களுக்கான கலைச்சொற்களை இனங்காண்பதற்கு வழிப்படுத்துங்கள்.

9. **மேலதிக வாசிப்பு**

- இணையத்தளம் , மின்நூலகம் , நூலகம் முதலியவற்றைப் பயன்படுத்தி கலைச்சொற்களைக் கண்டறிய வழிப்படுத்துங்கள்.

| **செயலடைவுத் தரம்** | **நியதி** | **மிகநன்று** | **நன்று** | **சாதாரணம்** | **முன்னேற்றம் தேவை** |
|---|---|---|---|---|---|
| விதந்துரைக் கப்பட்ட ஏனைய பாடங்களுடன் தொடர்புடைய கல்விச் செயற்பாடுகளின் போது பொருத்தமான மொழியைப் பிரயோகிப்பார். | தொடர்பு படுத்தும் திறன் | பல பாடங்களை ஆழமாக தொடர்புபடுத் துகிறார். | உரிய பாடங்களை நன்கு இணைக் கிறார். | தொடர்பு கள் இருப்பி னும் மறைந்திரு க்கின்றன. | தொடர்பற்ற அல்லது குழப்பமான இணைப்பு கள். |
| | மொழிப் பயன்பாடு | பொருத்த மான, வளமான மொழி | தகுந்த, தெளிவான மொழி | எளிய ஆனால், பொருத்த மானமொழி | குழப்பமான அல்லது சரியல்லாத மொழி |
| | கருத்தாடல் | ஆழமான கருத்துகள், பகுத்தறிவு தெரிகிறது. | கருத்துகள் தெளிவாக உள்ளன. | கருத்துகள் அடிப்படை மட்டத்தில் உள்ளன. | கருத்தளவு இல்லாத பதில்கள். |
| | சூழ்நிலைச் சிந்தனை | பாடநூல் வெளியான சூழலை புரிந்து பதிலளிக் கிறார். | பகுதி புரிதலுடன் பதிலளிக் கிறார். | வெளிப்ப டையான சிந்தனை யின்றி பதிலளிக் கிறார். | சூழ்நிலை யைத் தவறாக புரிந்து பதிலளிக் கிறார். |

# மொடியூல் இல : 3

# கற்றற் சந்தர்ப்பம் - 1 திருக்குறள் - அன்புடைமை

| **கற்றல்பேறு** | **செயலடைவுத் தரம்** | **உள்ளடக்கம்** | **உள்ளடக்க எல்லைகள்** |
|---|---|---|---|
| 4.1<br>இலக்கிய ஆக்கங் களை வாசித்துக் கிரகித்து ஆக்கங் கள் பற்றிய கருத்துக்களை முன்வைப் பார். | இலக்கியம் ஒவ்வொன்றின தும் ஆசிரியர்பற்றிய விபரங் களை எழுதுவார்.ஆசிரியரின் பின்னணி, வேறு ஆக்கங்கள், விருதுகள் பெற்றிருப்பின் அவை பற்றிய விபரம் (50 சொற்கள்) | திருக்குறள்<br>அன்புடைமை | திருவள்ளுவர் பற்றிய அறிமுகம்<br><br>அன்புடைமை<br>- 10 குறள்கள் |

**பாடத்தின் நோக்கம் :- (AIMS)**

- திருவள்ளுவர் பற்றிய (முக்கியமான) விபரங்களை அறிந்து கூறுவார்.
- அன்புடைமை என்ற அதிகாரத்தில் அன்பு பற்றி கூறப்பட்டுள்ள விடயங்களை அறிந்து கூறும் திறனைப் பெறுவார்.
- அன்புடைமை அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற்கொண்டு அதற்கேற்ப துலங்குவார்.
- நல்லொழுக்க விழுமியங்களை மனதிற்கொண்டு சமூக நீதி, நியமங்களை கடைப்பிடித்து ஒழுகுவார்.

1. **செயற்பாடு :-** 3.1.1
2. **காலம்** :- 50 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** திருவள்ளுவர் பற்றி அறிந்து கொள்ளல்.
4. **செயற்பாட்டின்மூலம் மாணவர் அடைந்துக்கொள்ள உள்ளவை :-**
    - திருவள்ளுவர் பற்றி அறிந்து கூறுவார்.
    - திருக்குறள் பற்றி அறிந்து கூறுவார்.
    - அன்புடைமை பற்றிய தெளிவினைப் பெறுவார்.
    - அன்புடைமை பற்றி விளக்கமாகக் கூறுவார்.
5. **செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல் :-**
    - மொடியூலில் தரப்பட்டுள்ள செயற்பாடு 1 இனை அவதானியுங்கள்.
    - இங்கு திருவள்ளுவர் பற்றி கூறப்பட்டுள்ள கருத்துகள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
    - திருவள்ளுவர் பற்றி ஐம்பது சொற்களுக்குக் குறையாமல் பந்தி ஒன்றை எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.
    - எழுதிய அப்பந்தியை வகுப்பறையில் முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
6. **தரவிருத்தி உள்ளீடுகள் :-**
   திறன்பலகை, திருக்குறள்
7. **செயற்பாட்டின் மூலம் அடைந்துக்கொள்ளப்படும் திறன்கள் :-**
    - தொடர்பாடல் திறன்
    - படைப்பாற்றல்
    - விடாமுயற்சி

* இணைந்து செயற்படல்

**8. வீட்டு வேலை :-**

* திருக்குறளுக்கு உரை எழுதிய பல்வேறு ஆசிரியர்கள் பற்றி தேடியறிந்து குறிப்பெடுத்து வர வழிகாட்டுங்கள்.

**9. மேலதிக வாசிப்பு :-**

* இணையத்தளம் , மின்நூலகம் , நூலகம் முதலியவற்றைப் பயன்படுத்தி மேலதிகமாக திருக்குறள் பற்றி அறிந்து கொள்ள வழிப்படுத்துங்கள்

| **செயலடைவுத் தரம்** | **நியதி** | **மிகநன்று** | **நன்று** | **சாதாரணம்** | **முன்னேற்றம் தேவை** |
|---|---|---|---|---|---|
| இலக்கிய ஆக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வினவப்படும் வினாக்களுக்கு விடை கூறுவார். (மூன்று வினாக்கள்) | வினாவை புரிந்து கொள்வது | வினாவின் நோக்கை முழுமையாகப் புரிந்து சரியான கோணத்தில் பதிலளிக்கிறார். | வினாவை நன்றாகப் புரிந்து பதிலளிக்கிறார். | வினாவை பகுதியளவில் புரிந்து பதிலளிக்கிறார். | வினாவை தவறாக புரிந்து பதிலளிக்கிறார். |
| | இலக்கிய ஆதாரம் | விடையிலும் மேற்கோள்களிலும் இலக்கிய ஆதாரம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | இலக்கிய ஆதாரம் சில அளவுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. | இலக்கிய ஆதாரம் குறைவாக உள்ளடக்கப்பட்டுள்ளது. | இலக்கிய ஆதாரம் இல்லாமல் பொதுவான பதிலாக உள்ளது. |
| | பகுத்தறிவுடன் பதிலளித்தல் | விடை பகுத்தறிவு சார்ந்தும் ஆழமாகவும் உள்ளது. | விடை பொதுவாக நன்றாக உள்ளது. | விடை மேற்பரப்பாக உள்ளது. | விடை தொடர்பற்ற அல்லது தவறான தகவல்களுடன் உள்ளது. |
| | மொழித் திறன் மற்றும் ஒழுங்கமைப்பு | தெளிவான மொழியில் சீராக எழுதப்பட்டுள்ளது. | மொழி நன்றாகவே உள்ளது சில பிழைகள் இருக்கலாம். | பிழைகள் காணப்படுகின்றன வாசிப்பில இடையூறு. | மொழி குழப்பமாக உள்ளது. வாக்கியங்கள் சரியாக இல்லை. |

1. **செயற்பாடு :-** 3.1.2
2. **காலம் :-** 50 நிமிடங்கள்
3. **செயற்பாட்டுத் தலைப்பு :-** அன்புடைமை
4. **செயற்பாட்டின் மூலம் மாணவர்கள் அடைந்துக்கொள்ள உள்ளவை :-**
   - அன்புடைமை அதிகாரத்தைப் பற்றி அறிந்து கூறுவார்.
   - அன்புடைமையில் கூறப்பட்டுள்ள(பொருளை) குறள்களுக்கான பொருளை விளங்கிக் கூறுவார்.
   - திருக்குறள் ஓதும் முறையை அறிந்து வெளிப்படுத்துவார்.
   - நெகிழும் தன்மை கொண்ட வாழ்க்கைத்திறனைக் கட்டியெழுப்புவார்.
5. **செயற்பாட்டிற்கான அறிவுறுத்தல் :-**
   - செயற்பாடு 2,3 இல் தரப்பட்டுள்ள விடயங்களை அவதானியுங்கள்.
   - தரப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி இவ்வதிகாரத்தை விளக்குங்கள்.
   - திருக்குறளை ஓதும் முறையை அவதானிக்கச் செய்து அவ்வாறு ஓதுவதற்கு மாணவர்களை வழிகாட்டுங்கள்.
   - திருக்குறளை ஓதும் முறையை அவதானிக்கச் செய்து அவ்வாறு ஓதுவதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்.
   - கலப்புக்கற்றல் அணுகுமுறையினைக் கையாளுங்கள்.
6. **தரவிருத்தி உள்ளீடுகள் :-**
   திறன் பலகை, திருக்குறள்
7. **செயற்பாட்டின் மூலம் அடைந்துக்கொள்ளப்படும் திறன்கள் :-**
   - தொடர்பாடல் திறன்
   - படைப்பாற்றல்
   - விடாமுயற்சி
   - இணைந்து செயற்படல்
8. **வீட்டு வேலை :-**
   - அன்புடைமை அதிகாரத்தில் உள்ள குறள்களை ஓதிப்பழகி வரும்படி வழிப்படுத்துங்கள்.
9. **மேலதிக வாசிப்பு :-**
   - இணையத்தில் திருக்குறள் பற்றிய தகவல்களை தேடியறிய வழிப்படுத்துங்கள்.

| செயலடைவுத் தரம் | நியதி | மிகநன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| இலக்கிய ஆக்கங்களை வாசித்து அதன் கருப்பொருளை சுருக்கமாக முன்வைப்பார். | கருப் பொருள் புரிதல் | கருப்பொருளை தெளிவாகவும் ஆழமாகவும் உணர்கிறார். | கருப்பொருள் நன்கு புரிந்திருப்பது வெளிப்படுகிறது. | பொது வாகவே புரிந்து கூறுகிறார். | கருப்பொருள் தெளிவாக இல்லை, அல்லது தவறாக உள்ளது. |
| | சுருக்கத் திறன் | மிகச்சரியாகவும் செறிவாகவும் சுருக்குகிறார். | சுருக்கமான வகையில் கூறுகிறார். | சுருக்கம் இடைஞ் சலுடன் உள்ளது | சுருக்கம் இல்லா மல் விரிந்துள்ளது அல்லது முக்கியம் இல்லாத தகவல்கள் அதிகம். |
| | தொடர் புடைய முக்கிய விடயங் களை தேர்வு செய்தல். | முக்கியமான விஷயங்களை மட்டும் தேர்வு செய்கிறார். | பெரும் பாலான முக்கிய அம்சங்களைச் சேர்ந்ததாக உள்ளது. | சில முக்கிய அம்சங்கள் தவற விட்டிருக் கலாம். | முக்கியமான அம்சங்களைத் தவிர்த்து, இரண்டாம் தர விவரங்கள் இடம்பெற்றுள்ளன. |
| | மொழி நடை | தெளிவான, அழுத்தமான மொழியும் நடைப்பாணியும் உள்ளது. | மொழி புரிதலுக் குத் தக்கது | சில இடங் களில் குழப்பம் அல்லது சொற்களின் தவறான தேர்வு | மொழிப் பிழைகள் காரணமாக கருத்து தெளிவாக இல்லை. |

1. **செயற்பாடு :-** 3.1.3, 3.1.4, 3.1.5, 3.1.6
2. **காலம் :-** 50 நிமிடங்கள்
